ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

574

3L

218724

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் — 2
2. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் — 6
   [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]
3. மஹாவீரவைபவம் — 9
   [ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், ராகவாசார்ய ஸ்வாமி. வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]
4. அடியேன் கண்ட தத்க்ரதுந்யாயம் — 17
   [ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர், க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்.]
5. பட்டாபிஷேக ஸ்ரீமுகம் — 19
   [ஸ்ரீ. உப தோட்டாலம், வேணுகோபாலாசார்யஸ்வாமி, வேதாந்த சிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, ஸ்ரீரங்கம்.]
6. பஞ்சாங்க ஸங்க்ரஹம் — 20
7. விசிஷ்டாத்வைதமும் அப்பையதீக்ஷிதரும் — 21
   [ஸ்ரீ. உப. நெரூர் நாராயண ஐயங்கார் ஸ்வாமி, கரூர்.]
8. ஸ்ரீ தேசிகனும் பாதுகாஸஹஸ்ரமும் — 23
   [ஸ்ரீ. உப. K. R. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.]
9. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் — 25
10. புத்தகவிமர்சம் — (அட்டை 3-வது பக்கம்)

ஸ்ரீ:

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீஅழகியசிங்கர் நியமனத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீஅஹோபிலமடத்துப்பத்ரிகை

[ஜய-மன்மத]

ஸம்புடம் 14

ஸம்பாதகர்

ஸ்ரீ. உப. T. ராமஸ்வாமி ஐயங்கார், M. A., L. T.

ப்ரசுரிக்குமிடம்
30, பனகல் தெரு, திருவள்ளூர்.

திருவள்ளூர் ஸ்ரீமாலோல முத்ராலயத்தில்
அச்சிடப்பட்டது.

1955

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா - ஸம்புடம் 14

விஷய ஸூசிகை

[அகாராதி]

விஷயம்	பக்கம்
அட்டைப்படவிளக்கம்	25, 57, 92, 141
அம்புயத்தாளை யணைந்த ஆயிரந்தோளாளரி [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	167
அர்ச்சனையும் அதன்மொழியும் [மேலகரிக்குடி க்ராமவாஸி]	178
ஆதிதேசிகனும் ஆதிவண்சடகோபதேசிகனும் [ஸ்ரீ. உப. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, சென்னை.]	296
ஒரொன்றுதானே [ஸ்ரீ. உப. திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]	45, 115, 277
கதையும் காரணமும் [ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	16, 43
கவிகண்டீரவ: [ஸ்ரீ. உப. கூத்தப்பாக்கம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]	320
கவிதார்க்கிக ஸிம்ஹம் [ஸ்ரீ. உப. கொடியாலம் துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]	317
சரமச்லோகங்கள்	58
சற்குணசிகரம் [ஸ்ரீ. உப. வில்லிவலம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, பாதூர்.]	323
செய்திகள்	51, 113, 144, 152, 187, 239, 244, 305, 332, 351
சொல்லொன்று செயலொன்று [ஸ்ரீ. உப. புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவுள்ளூர்.]	257
சோகம் தவிர்த்தவர் [ஸ்ரீ. உப. புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவுள்ளூர்.]	330
தசாவதாரஸ்தோத்ரம் [ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, திருப்பதி.]	293
தமிழ் வளர்த்த இரண்டு ஆசார்யர்கள் [ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி வி. க்ருஷ்ணஸ்வாமிஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]	282
திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, திருப்பதி.]	9, 33, 101, 129, 157, 189, 221, 249, 355

210724.

விஷயம்	பக்கம்
திவ்யஸூக்திரஸாஸ்வாதம்	153
[ஸ்ரீ. உப. என். ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதுரை.]	
தீர்த்தன் பேசக்கிடந்ததே	41
[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]	
தீர்ப்பாரை	170, 233
[ஸ்ரீ. உப. ஓரகடம் கோ. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, அவளூர்.]	
தேசிகோத்தமனும் தேவாதிராஜனுகந்த கைங்கர்யமும்	287
[ஸ்ரீ. உப. பாதூர் ராகவாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	
நன்றி மறவாதீர்	280
[ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	
நற்போது போக்கு	137
[ஸ்ரீ. உப. ஓரகடம் கோ. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, அவளூர்.]	
43-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	18, 48, 77, 109, 142, 165, 185, 236, 260, 303, 334, 348
பகவத்யானஸோபானம்	5, 37, 105
[ஸ்ரீ. உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	
பஞ்சாங்கஸங்க்ரஹம்	128, 177, 240
பட்டாபிஷேக ஸ்ரீமுகம்	133, 161, 193, 225, 253
[ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	
பாதூரில் அடியேனுடைய அநுபவம்	346
[ஸ்ரீ. உப. காருக்குறிச்சி கோபாலரங்காசார்ய ஸ்வாமி.]	
புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் திவ்யசரிதம்	62
ப்ரசாரம்	216
[ஸ்ரீ. உப. ஸி. கே. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]	
மஹாவீரவைபவம்	201, 245, 315
[ஸ்ரீ. உப. பாதூர் ராகவாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	
மூலமந்த்ரஸித்தநாமார்ச்சநா	369
யாதவாப்யுதயம்	270
[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, திருச்சி.]	
விரோதபரிஹாரம்	173
[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]	
விளக்கை விளக்கிக்காட்டும் வேதாந்த வாசிரியன்	90
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	
ஸ்ரீஅழகியசிங்கரின் திருநக்ஷத்ரங்கள்	367
[ஸ்ரீ. உப. புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவுள்ளூர்.]	
ஸ்ரீஅழகியசிங்கரின் ஸ்ரீஅமுதன் மங்களாசாஸனம்	205
[ஸ்ரீ. உப. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை.]	

விஷயம்	பக்கம்
ஸ்ரீதேசிகனின் அரிய உபதேசங்கள் [ஸ்ரீ. உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	273
ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள் [ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	13, 26
ஸ்ரீசடகோபமாமுனிவன் வாழித்திருநாமம் [ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்ய ஸ்வாமி, நெடுந்தெரு.]	299, 326
ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, திருச்சி.]	99, 122, 209, 229, 263, 344
ஸம்பாதகரின் குறிப்புக்கள்	2, 22, 54, 86, 118, 150. 182, 214, 242, 266, 310, 340
ஸுசீலன் [ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	197
ஸுந்திரன் வந்திபற்றும் செந்தமிழ் பைங்கொடி [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	365
ஸ்த்ரீ தர்மம் [ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி.]	29, 93, 125
ஸ்தோத்ர ரத்நமும் ஸ்ரீதேசிகனும் [ஸ்ரீ. உப. அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	289
ஹிந்து தர்மமும் மதமும் [ஸ்ரீ. உப. சிலுக்கூர் மா. வெங்கடராகவாசார்ய ஸ்வாமி, ஹைதராபாக்கம்.]	147, 155

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } மன்மத ௵ தை ௴ { ஸஞ்சிகை 1

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

'संतोष एव पुरुषस्य परं निधानम्.' உலகத்தோர்க்கு ஸந்துஷ்டியே- ஸந்தோஷமே மிகவும் அடையத் தகுந்தது. ஸந்துஷ்டியையே தான் நாமனைவரும் விரும்புகிறோம். நமக்கு ஸந்தோஷம் என்பது நமது மனோ ஸந்துஷ்டி வ்யாபாரமேதான். மனத்தில் ஏற்படும் ஒருவித திருப்தியே. அதாவது- அமைதியேதான் நமக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது. இவ்விதமான திருப்தி ஒவ்வொருவருக்கும் மிகவுமவசியமானதாகும்.

மனத்தில் இவ்விதமான திருப்தியையடையாத ப்ராஹ்மணன் க்ஷேமம் அடையமாட்டானென்பது மூதோர் வாக்கு. உலகில் பலவித ஏற்றத்தாழ்வுள்ள ஜனங்களுக்கு நலனை உண்டாக்குவது அரசனின் கடமையாகிறது. இம்மாதிரி நலனைக் கொடுப்பதற்கு அவனுக்கு பலவித ஸாதனங்கள் தேவை. இவைகளை அரசன் எக்காலங்களிலும் தேடிக்கொண்டே இருத்தல் அவசியமாகிறது. ஆதலால் அரசனுக்கு முன் கூறிய விதமான திருப்தி எப்பொழுதும் பூர்ணமாக ஏற்பட்டிருப்பின் தன் கார்யங்களை அவன் சரிவரச் செய்யவியலாது. அதன் பொருட்டே முற்காலத்தவர் எக்காலமும் திருப்தியுடன் இருக்குமரசன், அதாவது-தனக்குத் தேவைகளை இல்லை என்ற மனோபாவத்துடன் இருக்கும் அரசன், ஸந்தோஷத்தை அடையமாட்டானெனவும் கூறினர்.

திருப்தி அதிருப்தி என்பவை நமது மனோ வ்யாபாரங்களே. இவைகள் நமது கொள்கைகளுக்கும், கடமைகளுக்கும் தகுந்தவைகளாக இருத்தல் மிகவும் அவசியம்.

ஒருவனுக்கு ஸந்தோஷமென்பது சரீரபோஷணையினாலும், மனோபோஷணையினாலும் ஏற்படுகிறது. மனோபோஷணையினாலேற்படும் ஸந்தோஷம் எக்காலமும் ஸ்திரமாகவே இருக்கும். இவ்வுலகில் ஒருவனுடைய ஸந்தோஷத்துக்கும், மேலுலகில் (அவனுடைய பிற்காலத்திய) ஸந்தோஷத்துக்கும் மனோபோஷணையேதான் உபயோகப்படும். இதுதான் ஒவ்வொருவனுக்கும் வித்யையினால் ஏற்படுகிறது.

ஸந்தோஷமே ஒருவனுடைய பொக்கிஷம் என்பதுபோல் வித்யையே ஒருவனுடைய பரம பொக்கிஷம் என்பதும் உண்மை. வித்யையினால்தான் அறிவு வளாச்சி ஏற்படுகிறது. அறிவு வளர்ச்சியினால்தான் ஒருவன் நற்காரியங்களில் ஈடுபடுகிறான். அதனால்தான் தன்னைச் சுற்றிலுமுள்ள ஸமூஹத்தினர்களுக்கு அறிவைப் புகட்டியும் அவர்களை நல்வழிகளில் ஈடுபடும்படியும் செய்கிறான். அப்படிச் செய்யவும் அவனுக்கு முடிகிறது.

ஸந்தோஷமென்பது பொருளால் மட்டில் ஏற்பட்டுவிடாது. அதிகப் பொருள் சேகரிப்பதனால் ஸந்தோஷமேற்படும் என்று நினைத்தல் பிழையாகும். அதற்கு மாறாக பல ஸங்கர்ப்பங்களில் பொருள்வ்ருத்தியினால் அமைதியின்மை அதிகரிப்பதும், அதன் மூலம் கவலையும், துக்கமுமேற்படுவதும் நமக்குத் தெரிந்தவைகளே.

உலகு தோன்றிய காலந்தொட்டு இம்மாதிரியான நிலவரங்கள் இருந்தே வந்திருக்கின்

றன. ஆதலால்தான் முன் நாட்களில் ஸமூஹத்தில் வகுப்புப் பாகுபாடுகளும், அவைகளுக்கேற்ப ஒவ்வொருவரின் ஆசாபாசங்களும் வகுக்கப்பட்டு அதன்படி நமது ஸமூஹம் முன்னேறி வந்திருக்கிறது.

வித்யாபிவ்ருத்தியில் ஈடுபடுபவர்கள் ஜ்ஞாநமார்க்கங்களில் முன்னேறி வந்திருக்கிறார்கள். ஜ்ஞாநமார்க்கங்களில் ஈடுபடுபவர்கள் ஆசாபாசங்களை ஒழித்தல் மிகவும் அவசியம். ஆசாபாசங்கள் உலகவாழ்க்கையில் ஈடுபடுத்தும். அப்பொழுது ஜ்ஞாநாபிவ்ருத்தி ஏற்படுவது கடினம். ஆகவேதான் ஆசாபாசங்களை ஒழித்தல் ஜ்ஞாநிகளுக்கு அவசியமாயிற்று.

இம்மாதிரியாக ஆசையை ஒழித்து ஸந்துஷ்டியுடன் உலகில் வாழ்ந்து வரும் காலத்தில் ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக் கொண்டு வந்தவர்களே நாட்டின் அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக விருந்தனர், இவர்களன்னியில் நாட்டில் முன்னேற்றமேற்பட்டிருக்காது.

புகழ் பெற்ற மதத்தலைவர்களோ, இதர கல்விமான்களோ இம்மாதிரியன ஆசையற்ற வாழ்க்கையையே பின்பற்றியிருந்தனர். அவர்களின் புகழ் எளிய வாழ்க்கையிலேயே சிறப்புற்றிருந்திருக்கின்றன.

ஆன்மீகத்துறையில் முன்னேறியிருந்த நமது நாட்டில் எளிய வாழ்க்கையையே உயர்ந்ததாகக் கருதி வந்தனர்.

சில தினங்களுக்கு முன்பு ஓர் சொற்பொழிவில் ஓர் அரசியல் அறிஞர் இது விஷயத்தை உண்மைக்கு மாறான முறையில் விளக்கிக் கூறியிருப்பதை நாம் கேட்டு வருந்தவேண்டி வந்தது. எளிய வாழ்க்கையை விரும்புவது நாட்டு நலனுக்கு உகந்ததல்லவாம். இம்மாதிரி நோக்கத்துடன் வாழ்பவர்கள் தேசத்துரோகிகளாம். எப்படியிருக்கிறது இவருடைய கூற்று. எவ்விதமான வாழ்க்கையை முற்காலத்து ஜ்ஞாநிகள் உயர்ந்ததெனக் கருதினார்களோ, எவர்களால் நாடு நாகரீகத்துக்குப் பெயர் பெற்றதாக இருந்ததோ, அதே காரணத்தை நாட்டிற்கு விரோதமான கார்யம் எனக் கூறும் அறிஞர்களுமுளர் என்றால் இதைக் காலத்தின் கூத்து எனக் கூறுவதைத் தவிர வேறென்ன சொல்வது.

பொருளாதாரத்துறையில் நாடு முன்னேற்றமடைதல் அவசியமென்பது உண்மையே. அது எதற்காக? நாட்டிலெல்லோரும் க்ஷேமமாயிருப்பதற்கு. க்ஷேமமென்பது ஆடம்பர வாழ்க்கை நடத்துவதினால் எனக் கூறுவது எவ்வளவு மதியீனம்?

முன்னாள் அரசர்களும், தனிகர்களும் ஆடம்பர வாழ்க்கையைப் பின் பற்றினார்கள் என்றும் இதுவே உயர்ந்ததெனக் கருதப் பட்டதாகவும் இப்பெரியார் கூறுகிறார். உண்மையை இவர் அறியவில்லை. ஆடம்பரத்தில் மூழ்கிக் கிடந்த அரசர்களும்கூட எளிய வாழ்க்கை நடத்தி வந்த ஜ்ஞாநிகளிடம், தபோதனர்களிடம் பய, பக்தி, விச்வாஸத்துடன் வாழ்ந்தனர். தபஸ்விகளுக்கு சிஷ்யர்களாகவும் இருந்தார்கள். ஆகவே புகழ் யாருக்கு அதிகமென்பதை நாம் நன்கு அறியலாம்.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன்போன்ற மஹான்கள் ஆடம்பரத்தை வெறுத்து வந்தார்கள். வைராக்ய பஞ்சகத்தில் கூறியபடி ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் இவர்களை மதிக்கவேயில்லை என்பதும் நமக்கு நன்கு புலனாகிறது.

ஆகவே அமைதியிலும், எளிமையிலும் காணப்படும் பெருமையும், புகழும், ஸந்துஷ்டியும் ஆடம்பரத்தில் காணமுடியாது. ஆடம்பரத்தில் ஈடுபடும் மேனாட்டவர்களின் நாகரீகத்தைக் கண்டு மதி மயங்கிய பல அரசியலார்களின் கூற்றுக்களைக் கண்டு நாம் மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது.

* * * * * *

அரசியல் மொழி

அரசியல் மொழி ஹிந்தியாக இருத்தல் வேண்டுமெனக் கூறுபவர்கள் பலர். முன்போல ஆங்கிலமே பலகாலம் இருந்து வரவேணுமெனக் கூறுபவர்கள் பலர். ப்ரதேசமொழியே இருத்தல் வேண்டுமென அந்தந்த ப்ரதேசங்களில் கூறுபவர்களும் உண்டு.

இம்மாதிரி நிலையில்தான் அரசியல் மொழி நிர்ணயக் கமிட்டியார் பலவிடங்களுக்குச்

சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

தத்காலம் சென்னையில் இக்கமிட்டியினர் விசாரணை நடத்தி வருகின்றனர். அது ஸமயம் மதிப்பிற்குறிய ராஜாஜி அவர்கள் ஸம்ஸ்க்ருதத்தை அரசாங்கமொழியாக்கலாமென ஓர் யோசனை கூறியிருப்பதை ஆராய்ந்துபார்த்தல் மிகவுமவசியம். இதற்கு முன்னதாகவே பல பெரியோர்கள் இக்கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் தத்கால அரசியலமைப்பில் நமது ஸமூஹத்தில் இதை ஒப்புக் கொள்பவர்கள் ஒரு சிலரே ஆகும். ஆகவே அரசியல் விஷயமாகவும், ஸமூஹ நிலவரங்களினாலும் இக்கொள்கையைத் தளரவிட வேண்டியிருக்கிறதேதவிர வேறு காரணங்கள் கூற முடியாது. அறிஞர்களின் கருத்து அதுவே.

*   *   *   *

ஸமீபத்தில் சென்னையில் நடந்த இசையரங்கங்களிலும், ஸங்கீத வித்வத்ஸபைகளிலும் ஶாஸ்த்ரீயமுறையில் ஸங்கீதம் அமையவேண்டிய முறைகளைப் பற்றி சர்ச்சைகள் நடந்தன.
இம்மாதிரி
பக்திப் பாடல்களும் யான சர்ச்
ஸம்ஸ்க்ருத் ச்லோகங்களும் சைகளில்
தமிழ்பாடல்
களைப்பற்றி வெகுவாக ப்ரஸ்தாவிக்கப்பட்டன. பக்தியில்லாத பாடல்கள் நாட்டிற்கு உகந்தவைகள் அல்ல என்று பெரும்பான்மையோர் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். இது மிகவும் போற்றத்தகுந்த விஷயமே. ‘பக்தியில்லாத ஸங்கீதம் வீண்’ என்று புகழ்பெற்ற ஸங்கீத வித்வான் ஸ்ரீ தியாகராஜர் பாடியிருப்பதை நாம் அறிவோம். அதே உண்மையைத்தான் இவர்களும் இப்பொழுது கூறியிருக்கிறார்கள். உண்மை என்பது எக்காலத்திலும் ஒரே நிலையில் உள்ளது தானே!

சில சொற்பொழிவுகளில் நமக்குப் புறியும் படியான தாய்மொழியிலேயே பாடல்கள் நம் நாட்டில் இருத்தல் அவசியம் எனவும் கூறியுள்ளனர். இதன் தத்துவத்தை நாம் உணராமலில்லை. ஆயினும் தொன்றுதொட்டு பக்தியை நமது நாட்டில் பரப்பி வந்திருக்கிற ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரங்களைப் புறக்கணித்து, அவைகளின் ஸ்தானங்களில் தமிழ் பாடல்களை முக்யமாகக் கருதவேண்டும் என்பதை மட்டில் நாம் அப்படியே ஒப்புக்கொள்வதற்கில்லை. பாமரர்களாயினும், படித்தவர்களாயினும் ஸம்ஸ்க்ருதமொழி கலந்த பாடல்களை ரஸித்தே வந்திருக்கிறார்கள். ஆதலால் முழுமையும் இம்மாதிரியான பாடல்களை வெறுக்காமல் இருப்பதே நாட்டின் அறிவுவளர்ச்சிக்குகந்ததாகும்.

இசைத்தட்டுஸங்கீதத்தை அகில இந்திய ஒலிபரப்பி நிலையங்களில் நிறுத்த வேண்டும் என்ற கொள்கையும், அதற்கு எதிர்ப்பும் ஸமீபத்தில் நாம் கேட்டவை. ஆனால் தத்காலத்தில் ஸங்கீதம் என்பதின் பெயரால் நாடகங்களிலும், திரைப்படங்களிலும் பலவித ஆபாஸப்பாடல்கள் பாடுவதை நமது ஸமூஹம் ஸஹித்துக்கொண்டிருப்பது நமது அறிவுநிலையை வெளியோர்க்கு உணர்த்துகிறது. நாடகங்களையும், திரைப்படங்களையும் வெறுப்பவர்களுக்குக்கூட, இவ்விதமான ஆபாஸப்பாடல்கள் தவிர்க்கமுடியாதவைகளாக இருக்கின்றன.

நகரங்களிலும், சிறிய கிராமங்களிலும் கூட ஒலிபரப்பிகளின் மூலம் இம்மாதிரி ஆபாஸமான கருத்துக்கள் கொண்டவைகளும், ஸமூஹத்தின் ஒற்றுமையைக் குலைப்பவைகளும், காதுக்கு இனிமையைக் கொடுப்பதற்குப் பதிலாக ஓர்வித அதிர்ச்சியையும், தாழ்ந்தஉணர்ச்சியையும் கொடுக்கக்கூடியவைகளுமான பாடல்களை காலை, மாலை, பகல், இரவு என்ற பேதமே இன்றி ஸதா ஸர்வகாலங்களிலும் பாடப்பட்டு வருகின்றன.

வெகுவாரியான ஜனங்களின் வீடுகளில் கல்யாணங்களில் கூட இம்மாதிரியான இசைத்தட்டு ஒலிபரப்பி ஓர் முக்கிய நிகழ்ச்சியாகி விட்டது. கல்யாணங்களில் அமங்களகரமான பாடல்கள் பாடப்படுவதும் ஸர்வஸாதாரண நிகழ்ச்சி. இம்மாதிரி ஒலிபரப்பி இல்லாததால் பிள்ளைவீட்டார் கோபப்பட்டு கல்யாணத்தை நிறுத்திவிட்டார்கள் என்ற ஓர் செய்தியும் ஸமீபத்தில் பத்திரிகைவாயிலாகத் தெரிய வந்தது. என்னே நம் ஸமூஹத்தின் மடமை!

ஜனங்களின் அமைதியைக் கெடுக்கும் வகையில் உள்ள இம்மாதிரி பாடல்களை எல்லாவிடங்

களிலும் ஒலிபரப்புவதை ஏன் நாகரீகமுள்ள அரசாங்கம் தடை செய்யவில்லை?

நற்பழக்கமுள்ள ஸமூஹத்தினரிடையேகூட சிறுவர்களும் சிறுமிகளும் இம்மாதிரியான பாடல்களை, ச்ரமமின்றி மனப்பாடம் செய்யும்படிச் செய்து விடுகிறது இம்மாதிரியான ஒலிபரப்புக்கள்.

நமது ஸமூஹம் இம்மாதிரியான பாடல்களை பஹிஷ்கரிக்கும் நிலையை அடைய எவ்வளவு காலம் ஆகுமென்று சொல்வதற்கில்லை. ஏனெனில் ஸமூஹ அமைப்பும், அறிவு வளர்ச்சியும் இம்மாதிரிப் பாடல்களிலேயே ஜனங்களின் மனோவ்ருத்தியை ஈடுபடும்படிச் செய்கிறது.

அரசாங்கமோ, அல்லது ஸமூஹத்திலுள்ள அறிவாளிகளோ இம்மாதிரியான ஆபாஸப் பாடல்களைத் தடுக்க முயற்சிக்க வேண்டும். அத்துடன் பக்தி புகட்டும் பாடல்களையும், ச்லோகங்களையும் அடிக்கடி ஸமூஹத்தினரின் நலனுக்காக ஆதரிக்கவும் வேண்டும்.

புரிசையில் ஸ்ரீ அழகியசிங்கர்

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(14-வது ஸம்புடம் 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸித்தகுணாஷ்டகத்வ:— அவருக்கு உடல் போல அவருக்கு அப்ருதக்ஸித்தமாயிருப்பதில் உயிரான அவருடைய குணாஷ்டகங்களு மிவனுக்கும் ஸஹஜமாகக் கூடுகிறது. ப்ரஹ்மத்தோடு அவிபாகம் வருகையில், ப்ராஹ்மமெனும் குணாஷ்டகஸம்பத்தி ஸித்திக்கிறது. இது 3-வது ப்ரஹ்மாதி கரணம். இந்த குணாஷ்டகங்களில் பாவரூபமானவை கடையிரண்டு. ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பத்வம். நினைத்தமாத்திரத்தால், ஸங்கல்பமாத்திரத்தால் ஸித்திப்பது. இது 4-வது அதிகாணம். கைங்கர்யங்கள் புரிவதற்கு என்ன சரீரங்கள் என்ன ஸஹாயங்கள் வேண்டுமென்றாலும் இஷ்டப்பட்ட உடனே ஸித்திக்கின்றன. இப்படி யசேஷ கைங்கர்யங்களைப் புரியும் இன்பம் எண்குணம் ஸித்திப்பதின் ஃபலம், ப்ரஜாபதி வரேண்ய ஸாம்யம்— பகவானோடு அத்யந்தம் ஸாம்யத்தைப் பெறுகிறான். போகே- இந்த ஸாம்யம் ஆநந்தத்தில் மட்டும். 'போகே' என்பதற்கு 'போகமாத்ர' என்று அவதாரணப் பொருள், 'ஸவாக்யம் வாக்யம் ஸாவதாரணம்' என்கிற ந்யாயத்தால் கிடைப்பது. 'ப்ரஜாபதி வரேண்ய ஸாம்யம் போகே' என்றதால் போகத்தில் (ஆநந்தத்தில்) முழு ஸாம்யத்தைப் பெறுகிறான் என்று பொருள். 'போகமாத்ர ஸாம்ய' என்கிற ஸூத்ரத்தில் 'மாத்ர' பதத்திற்கு, 'மட்டும்' 'முழுவதும்' என்கிற இரண்டுப் பொருளையும் கொள்ளலாம். 'வரேண்ய ஸாம்யம் போகே' என்றதால் 'ஆநந்தத்தில் முழுவதும்' என்ற அப்பொருளையும் ஸூசிக்கிறது. நிவ்ருத்திகவொஸ்தம்— ஆவ்ருத்தியின் ப்ரஸங்கமேயில்லாமல் பிணை கொடுக்கிலும் போகவொட்டார், என்றதை நினைக்கவேணும்.

ஆகையால் இந்த விஷயத்தை அறிவிக்கத் தகுமானால் இந்த ஸந்தேஹத்தைத் தெளிய விரும்புகிறேன்.

ஸங்கல்பர்:—உமக்கு ஸ்வாராஜ்யம் கிடைக்கப் போகிறது. உமக்கு ஸித்தித்திருப்பதை ஏன் உமக்குச் சொல்லப்படாது? ரஹஸ்யமாயினும் உமக்குச் சொல்லலாம்.

அவதாரரஹஸ்யதத்த்வவேதீ
விகதப்ராரப்தகர்மா வீதராக: ।
அவநஹ்யவநேந நித்யதேஹம்
வ்ருதிமஹாவி வரம் வஹம் த்ரியாந்த: ॥

'அஜாயமானோ பஹுதா விஜாயதே, தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்' 'யோ ஜாதவேதஸ்ய ஜஹிதோ ஜஹிவ்யாக' அஜோபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஸ்வரோபி ஸந் । ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா' 'ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: । த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந ॥' என்கிற அவதாரரஹஸ்யதத்வபரப்ரமாணங்களை நினைக்க வேணும். ப்ராரப்தகர்மம் இன்னும் சில ஜந்மங்களைக் கொடுக்கக் கூடியதானாலும் பகவானுடைய அவதாரமெனும் பிறவாத பிறப்பின் உண்மைக்ரமத்தை யறிந்தவருக்கு மறு ஜந்மமில்லை. நீர் அந்த ரஹஸ்யத்தை யறிந்தவர். 'நானும் பிறந்து நீயும் பிறக்கவேணுமோ' என்றந்த கீதாச்லோகத்திற்கு ஈடு உரைத்த ரஸப்பொருள். இதனால் இந்த தேஹம் விழுந்த உடனே பரமபதம் சேருவது திண்ணம். விகதப்ராரப்திகாஸ வீதராக:—இந்த தேஹம் விழுந்தபின் உடனே பரமபதம் கிடைக்காமல் ப்ருக்ருதி மண்டலத்திற்குள் வஸு, ருத்ர, ஆதித்யாதி பதங்களை யடைந்து அவற்றை யனுபவித்தபிறகுதான் பரமபதத்

தில் பகவான் திருவடிப்ப்ராப்தி என்ற தாமத மிருக்கலாம். மது வித்யாதிகளிலிப்படித் தாமதமுண்டு. அது இடையே அந்தப் பதங்களிலாசையல் வருவது. ஸ்வர்காதி க்ஷுத்ர க்ராமங்களில் வஸிப்பதில் உமக்குக் காமமேயில்லாததால் அந்தத் தாமதத்திற்கும் ப்ரஸக்தியில்லை. அபுநராவ்ருத்தயே—உமக்குப் புநர் ஜந்மத்திற்கிடமில்லாததால் நிரபாயம்—யாதொரு அபாயமுமில்லாமல் ஸ்ரிய:பதே:—பகவானுடைய பரம் பதம்—ஸர்வோத்க்ருஷ்டமான லோகத்தை, ப்ராப்ஸ்யஸி—நீர் செல்வீர். 'ஸ்ரிய:பதி:' என்று பகவானுக்கு ப்ரஸித்தத் திருநாமம். 'க்ஷீராப்தே: ஸூர்யஸோமாக்நீநாம் ... । ஸ்ரீ ... ஸ்ரியாபதிரிதி ஸ்ம்ருத: ॥' என்ற பகவதுக்திப்படி பாற்கடலும், ஸூர்ய மண்டலமும், உபேந்த்ரநிவாஸஸ்வர்கமும் ப்ரக்ருதிமண்டலத்திலுள்ள ஸ்தாநங்கள். 'விஷ்ணோ: பரமம் பதம்' என்பது ப்ராக்ருதாதீதமான அவர் ச்ருதிப்ரஸித்த ஸ்தாநம். ஸத்யவாக்யனான நான் உறுதியாகக்கூறுவதை நம்பியிரும்.

ஸ்வஸேவா ஸார்வபௌமத்வம் பவதே பரமாத்மநா । விவேகஸ்ய ச வீரஸ்ய யௌவராஜ்யம் ப்ரதித்ஸிதம் ॥

பரமாத்மா உமக்கு தம் ஸேவையில் ஸார்வபௌமத்தனத்தையும், மஹாமோஹனை ஜயித்த உம் விவேகருக்கு யுவராஜபதவியையும் அளிக்க விரும்புகிறார். அன்றீன்ற கன்றிடத்தில் ஸ்நேஹம்போல் புதிதாக வரும் குழந்தையை ஸார்வபௌமனென்றாலும் 'நித்யாபிவாஞ்சித பரஸ்பர நீசபாவை:' என்றபடி வந்தவருக்கு மற்றெல்லோருக்கும் பணி செய்யும் தாழ்மையையே விரும்பி அநுஷ்டிப்பர். பகவத்ஸேவையில் எல்லோரும் ஸார்வபௌமரே. மேலும்:—

ப்ராக்தநம் ஸஞ்சிதஞ்சைவ ஸர்வம் ப்ரதஹதி க்ஷணாத்
ப்ராரப்தேதரத: கலி:
ப்ரத்யக்ஷா ... வர்திஷ்ய
ந வா ப்ராப்ஸ்யஸே ... ப்ரியம் ।

ஸூரிபி: ... ப்ரணஷ்ட ...
... ப்ரக்ஷ...
ஸத்யஸ்தே ஸ தத்ர விமுக்த ஏவ ந த:
... ஸேவ்யதே ॥

உமக்கு இப்பொழுது பூர்வாகங்களின் நாசமும், பின் நேரும் புத்தி பூர்வமல்லாத அகங்களின் ஒட்டாமையும் ஸித்தித்திருக்கிறது. அந்தக்கர்மங்களிலிருந்து நீர் இப்பொழுது ஏககாலத்தில் ஒரேயடியாய் முக்தர். இன்னும் விதேஹமுக்தி வாராவிடினும் அக்கர்மங்களிலிருந்து நீர் முக்தர்தான். 'ஸத்யஸ்' என்பதற்கு, ஸஹ, ஒருமிக்க, என்று இங்கே பொருள். 'ஸத்யஸ் ஸஹ ஸபத்யபி' என்று அமரகோசம். பக்தியோகம் ஆரம்பிக்கும் முதல் க்ஷணத்திலேயே உத்தரபூர்வாகாச்லேஷவிநாச ஸங்கல்பம் ஏற்படுவதால் பக்தியோகம் தேஹபாதம் வரையில் அஸக்ருதாவ்ருத்திக்கப்பட்டாலும் முதல் (ஸக்ருத்) ப்ரத்யத்திலேயே இந்த ஸங்கல்பம் ஸித்தித்து விடுகிறதென்கிற ரஸமும் ரஸிக்கத்தக்கது. பக்தியோகமெனும் ப்ரியதம வஸ்துவின் இன்பத்யாநம் தொடங்கியது நிற்காது. அந்த ருசியைக் கண்டு விட்டபடியால் அது விடாது. ஸாம்ப்ரதம்—இப்பொழுதே, ஸாம்ப்ரதமேவ—என்றுமந்வயம். இப்பொழுதே அக்கர்மங்களெல்லாம் க்ஷமிக்கப்படுமென்கிற ஸங்கல்பமாகிய நான் ஸித்தித்து விட்டேன். இத: ப்ராக் க்ருதேப்ய:—இந்த க்ஷணத்திற்கு முன் செய்த வினைகளிலிருந்து முக்த:—உண்மை விடுதலை செய்யத்தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இத: உத்தரேப: க்ருதேப்ய:—இந்த க்ஷணத்திற்குப் பிறகு நீர் (அறியாமல்) செய்யும் குற்றங்கள் உம்மை ஒட்டக் கூடாதென்று தீர்மானம். அதுவும் ஓர் விடுதலைத் தீர்மானமே. அறியாமல் செய்த பின் வினைகளெல்லாம் ஒட்டுவதில்லை என்று இப்பொழுது ஒரே க்ஷணத்தில் ஒரு மிக்கத்தீர்மானம். தன் பயனை முன்பே கொடுக்கத் தொடங்கி விட்ட கர்மத்தின் பயனாக வரும் ஸுகம் விவேகியான உமக்கு மிக க்ஷுத்ரஸாரமே என்பது ப்ரத்யக்ஷமாய்த்

தெரிந்ததே. அதைத் தள்ளினுல் தள்ளும், அநுபவித்தாலநுபவியும், வரித்யஜ ந வா- ப்ரபந்நன் விஷயமாக இதை ஒட்டினுல், ப்ராரப்தத்தை ஒப்புக்கொண்டால் ஒப்புக்கொள்; வேண்டாமென்ருல் ஆர்த்தனுக அதையும் தள்ளிவிடு, என்று ப்ரபாவிலாஸ உரை. ஆதிபுருஷனுடைய தயாதேவியால் அனுப்பப் பட்டிருக்கும் நான் இப்பொழுது உம்முடைய ஸ்திதியின் உண்மையைத் தெரிந்து கொண்டதை அந்த தேவிஸந்நிதிக்குச் சென்று விண்ணப்பித்து ப்ரஹர்ஷிப்பிக்கிறேன். நான் போய்வருகிறேன் (என்று 2, 3, அடிகள் நடந்து)ஓரான் வழியான அத்யாத்ம ஜ்ஞாநத் தொடர்ச்சியான ஸம்ப்ரதாயத்திற்கும் ஜ்ஞாநிகளின் ஸந்ததித் தொடர்ச்சிக்கும் விச்சேதம் வாராமலிருப்பதற்காக உலகத்திற்கு ஓர் விஜ்ஞாபநமசெய்கிறேன். ஓர் அறிவிப்பு.

> ஹமவதி நிஹிதாத்மா ஹாமயெயெ ஶ்ரீநாம் வமாஷ உஹ ஹோத்மா வதஹெ
> ஸுதயாதூாழ | தநயஹெவஷயாநெ: ஸவ‌ஹஹெவஸூீ: வ்ருயமஹிஹிரஹிஷம்
> வநூர்தாம் விஶ்வமீ ||

ஶ்ரீநாம்-வேதவேதாந்தங்களுக்கெல்லாம், ஹாமயெயெ- மஹாபாக்யநிதியான, ஹமவதி- ஸ்ரீயஃபதியான புருஷோத்தமனிடத்தில், நிஹிதாத்மா- தன் ஆத்மபுத்திகளைச் சலியாமல் வைத்துக்கொள்ள, ஹோத்மாவமாஷ:- மஹாத்மாவான இப்புருஷன், ஸுதயா தூாம்- 'யாதீ' 'ஸுதயாதீ' என்று பூமிக்குப் பெயர். ப்ரஹ்மஜ்ஞாநியான 'ஸத்' 'ஸுதன்' என்றுசொல்லக்கூடிய இம்மஹாத்மக் குழந்தையை பூமித்தாயார் ஸந்தோஷமாய்த் தாங்குகிருள். உஹ- இப்பொழுது இந்த லோகத்தில், வதஹெ- இருக்கிருர். தஸ- ஆகையால் விஶ்வமீ- விச்வசரீரனை, விச்வவிசிஷ்ட ஒருயிரான, எல்லாமான, விச்வத்திருபமுடைய, ஓர்பரமாத்மாவினுடைய காக்ஷியால் ஸர்வத்தையும் ப்ரத்யக்ஷீகரிப்பது போல தெளிவையுடைய, ஸயம்- இவர், வ்ருயமஹிஹி:- மஹா மநஸ்விகளான, விசாலபுத்திகளான, ஸஹெவஸூ:-சிஷ்யர்களால், ஸவஷயாநெ:- மிக்க ஸாவதாநராய், ஸஹிஷம் ஸவஹம்- வேண்டியதெல்லாம், வநூர்தாம்- கேட்கப்படவேணும். இப்படிக்கொத்த மஹாத்மா தமக்கே 'ஸமஷமஹ:' என்று பாடினர் பகவான். ஊதை ஸூசிப்பது 'ஹோத்மா' என்னும் பதம். இவர்களைப் பகவான் இங்கே பலாத்கரித்து நிறுத்தி வைப்பதும், உலகத்தாரெல்லோரும் இவரைக்கேட்டு ஜ்ஞாநங்களைப் பெறவேணுர், ஸர்வஸம்சடங்களையும் தீர்த்துக்கொள்ளவேணுமென்பதற்கே பீஷ்மரை உத்தராயணப்ரதீக்ஷா வ்யாஜத்தால் நிறுத்தி வைத்ததுபோல, (என்று இப்புருஷனைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்லுகிருர்.)

புருஷன்:— (ஸந்தோஷத்தோடு) முன்பு கேட்டிருந்த பகவானுடைய அகடிதகடனை செய்யும் ஆச்சர்யசக்தியின் மஹிமையை நானிப்பொழுதுநேரில் அநுபவிக்கிறேன். அநாதியாய் கணக்கற்ற அபராதங்களைச் செய்து வந்திருக்கும் நான் உடனே மோக்ஷம் தரும் ப்ரஸாதத்திற்குப் பாத்திரமாகப் பரிக்ரஹிக்கப்படுகிறேன்.

> யஜிஹ வமரா வமராணவமரஷெண
> வஹிஷ்கரணாக வூஹிதவிரமஜவ்ருத்தி
> விஷயம் வூவவார வஹி: |
> தஜிஷஹெவா தஜெகஹெநமஹஸுய ரஹாதி
> ஶயாக வூவிதி ஹெநா ஹதீயஹெவிவெதி
> ஹமஹூதி ||

முன்பு ஆதிபுருஷனுடைய க்ருபைக்கு வெளிப்பட்டிருந்ததினுல், என் மனது தத்வத்ருஷ்டிக்கு விருத்தமாய், விஷமமாய் எங்கும் நிறைந்து உயிராயுள்ள ஸ்வயம்ப்ரகாசச்சோதிப்பொருளை விட்டுவிட்டு வெளியே வீணே ஸஞ்சரித்துக்கொண்டிருந்தது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(14-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

குசிகஸுத- விச்வாமித்ர முனிவரால், கதித- சொல்லப்பட்டவைகளும், நவ-ஒன்பதெண்ணிக்கை கொண்டவைகளும், விவித- பல அவாந்தரக்கதைகளுள்ளவைகளுமான, கத- முக்கியக்கதைகளையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) அயோத்திமாநகரிலிருந்து கிளம்பி மிதிலை நகர் அடையும் வரையில் விச்வாமித்ரமுனிவர் ஒன்பது முக்கியக் கதைகளைக் கூறி ஸ்ரீ ராமபத்ரனை மகிழ்ச்சியடையச் செய்தார் என்பதை இந்த சூர்ணிகை கூறுகிறது. இங்கு விச்வாமித்ர முனிவர் கூறிய கதைகள் ஒன்பது இடங்களில் தோன்றியபடியால் ஒன்பது சொல்லப்பட்டன. அவை வருமாறு:— 1 அங்கமென்னும் தேசத்தில் ஸ்தாண்வாச்ரமத்தில் நடந்த மந்மத தகந கதை, 2 கங்கையைக் கடக்கும்போது கூறிய ஸரயூநதியின் கதை, 3 இந்திரன் வ்ருத்ரனைக்கொன்று ப்ரம்ஹஹத்தி பாபத்தை விட்ட மலத கரூச தேசத்தில் ஸுகேதுவின் மகளான தாடகைக்கு அகஸ்தியமுனிவரின் சாபத்தினால் ஏற்பட்ட ராக்ஷஸரூபப்ராப்தி கதை, 4 ஸித்தாச்ரமமென்னுமிடத்தில் பகவான் வாமனாவதாரம் செய்து பலிச்சக்ரவர்த்தியை அடக்கியருளிய கதை, 5 ஸித்தாச்ரமத்தினின்றும் நீங்கி மிதிலைக்குப் புறப்படும்போது கூறிய, ஜநக மஹாராஜனின் அரண்மனையிலுள்ள சிவவில்லைப்பற்றிய கதை, 6 சோணையாற்றங் கரையிற் கூறிய விச்வாமித்ரமுனிவரின் முன்னோர்களைப்பற்றிய கதை 7 கங்கைக் கரையிற்கூறிய கங்கை, பார்வதி, ஸுப்ரஹ்மண்யன், இவர்களின் கதையும், ஸகரசக்ரவர்த்தி குமாரர்களின் கதையும், 8 கங்கையைக்கடந்து விசாலா நகரத்தையடைந்தபோது பாற்கடலைக் கடைந்ததைப்பற்றியும் திதி தவம் செய்ததைப்பற்றியும் கூறிய கதை, 9 கௌதமமுனிவரின் ஆச்ரமத்திற் கூறிய அகல்யாசாப விமோசன கதை ஆக முக்கிய கதைகள் ஒன்பது. இங்கு நவ என்பதற்குப் 'புதிய' என்று பொருள் கூறி ஸ்ரீ ராமபத்ரனால் முதன்முதல் கேட்கப்பட்ட என்று தாத்பர்யமுரைப்பாருமுளர். இளம்வயதினன், சக்ரவர்த்திகுமாரன், காட்டிலே நடந்து பழகினவனல்லன், புஷ்பம் விழுந்தாலும் பொறுக்கமாட்டாத ஸுகுமார சரீரன், வெயில் காற்று இவைகளால் தோன்றும் வருத்தலேசத்தையுமறியாதவன், எப்போதும் ஸுகாநுபவத்திற்கேயுரியவன் ஸ்ரீ ராமபத்ரன் என்றுகருதிய விச்வாமித்ரன் வநஸஞ்சாரத்தினால் க்லேசலேசமும் தோன்றாதபடி விசித்ரமான கதைகளைச் சொல்லி ஸ்ரீ ராமபத்ரனை மகிழ்வித்தான். இங்கு 'கதாபி ரபிராமாபி ரபிராமௌ ந்ருபாத்மஜௌ | ரமயாமஸ தர்மாத்மா கௌசிகோ முனிபுங்கவ: ||' என்கிற ஸ்ரீ ராமாயண ச்லோகம் கவனிக்கத் தக்கது. தர்மாத்மாவும் முநிச்ரேஷ்டருமான கௌசிகர் அழகிய ராஜகுமாரர்களை, இனிப்பான கதைகளால் மகிழ்வித்தார் என்பது இதன் பொருள். கால்நடையறியாது எப்போதும் வாஹனத்திலேறிச் செல்லும் வழக்கமுள்ள ஸ்ரீ ராமபத்ரன் விச்வாமித்ரனுடன் காட்டில் நடந்து செல்லும்போது அவர் கூறிய அழகிய கதைகள் வாஹனங்கள்போலமைந்து நடைச்ரமத்தை

மறக்கச்செய்தன என்ற கருத்தமைந்து மஹாகவி காளிதாஸனால் கூறப்பட்ட கீழ்வரும் ச்லோகத்தையும் கவனிக்கவும் ‘பூர்வவ்ருத்த கதிதை: புராவித: ஸாநுஜ: பித்ருஸகஸ்ய ராகவ: | உஹ்யமாந இவ வாஹநோசித: பாதசாரமபி ந வ்யபாவயத் ‖ அன்றிக்கே ‘குசிக ஸுத—விச்வாமித்ர விஷயத்தில் கதித— சதாநந்தமுனிவரால் சொல்லப்பட்ட நவ— புதிய விவித— பலவிதமான கத— கதையையுடைய ஸ்ரீ ராமபத்ர! என்று பொருள்.

(கரு) விச்வாமித்ரமுனிவர் சக்ரவர்த்தி குமாரர்களுடன் மிதிலைக்குச் செல்கின்றார். மிதிலாதிபதி ஜநகமஹாராஜன் புரோகிதரான சதாநந்தமுநிவருடன் எதிர்கொண்டழைத்து விதிப்படி பூஜிக்கிறான். விச்வாமித்ரனும் சதாநந்தரிடம் ‘உமது தாய் அகல்யாதேவி’ சாப விமோசனம் பெற்றாளென்பதைக் கூறுகிறார். அதைக்கேட்டு எல்லையிலா ஆநந்தமெய்திய சதாநந்தரும் ஸ்ரீ விச்வாமித்ரமுனிவரின் பூர்வ வரலாற்றை விஸ்தாரமாகக் கூறி ஸ்ரீ ராம பத்ரனையாநந்தப் படுத்தினர்.

मैथिलनगरसुलोचनालोचनचकोरचन्द्र!

மைதில நகரஸுலோசனலோசநசகோரசந்த்ர!

மைதில— மிதிலாதிபதியான ஜநகமஹாராஜனுடைய, நகர— பட்டணமான மிதிலையி லுள்ள, ஸுலோசனா—அழகிய கண்களையுடைய பெண்களின், லோசன—கண்களாகிற, சகோர— சகோரமென்னும் ஒருவகைப் பறவைகளுக்கு, சந்த்ர— சந்திரனான ஸ்ரீ ராமபத்ர!

(கரு) மிதிலையில் வாழும் பெண்மணிகள் யாவரும் ஸ்ரீ ராமபத்ரனின் திருமேனி அழகைக் கண்களாரக் கண்டு களித்தனர். நிலவைப் பருகி உயிர் வாழும் ஓர்வகைப் பறவைகள் சகோரம் என்ற பெயர் பெற்றன. அப்பறவைகள் எப்படி நிலவைப் பருகி மகிழ்ச்சியுடன் உயிர் வாழுமோ அப்படியே ஸ்ரீ ராமபத்ரனைக்கண்ட மிதிலைப் பெண்களின் கண்களும் அளவிலா மகிழ்ச்சி யெய்தின. இங்கு கண்களுக்கு சகோரப் பறவைகளைத் திருஷ்டாந்தமாகக் காட்டியதன் கருத்து வருமாறு:—சந்திரனாலேயே ஆத்மலாபத்தை சகோரப் பக்ஷிகள் பெற்றன. மிதிலைப்பெண்களின் கண்களும் ஸ்ரீ ராமபத்ரனை ஸாக்ஷாத்கரித்ததால் தான் தங்கள் படைப்பின் பயனையும் ஆத்மலாபத்தையும் பெற்றன என்று. இதனால் ஸ்ரீ ராமபத்ரனின் திருமேனி அழகு ஸர்வலோகாதிசயிதமென்பது ஸூசிக்கப்படுகிறது. இங்கு ‘ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம் | ந ஹி தஸ்மாந் மந: சச்சித் சக்ஷுஷீ வா நரோத்தமாத் ‖ நரா: ஸம்ஸக்தநேத்ரா: அபக்ராந்தேபி ராகவே ‖’ என்ற ஸ்ரீமத்ராமாயண ச்லோகங்களை யநுஸந்திக்கவும். இவற்றின் பொருள்:— எல்லையில்லாத் திருமேனியழகு முதலிய குணங்களால் புருஷர்களின் கண்களையும் மனத்தையும் கவர்ந்தவன் ஸ்ரீ ராமபத்ரன், அப்புருஷோத்தமனான ஸ்ரீ ராமபத்ரனை நேரில் இரு கண்களாலும் கண்டு களித்த மனிதன், ஸ்ரீராமபத்ரன் சென்ற பிறகும், அவன் திருமேனி ஸௌந்தர்யத்தில் செலுத்திய கண்களையும் மனத்தையும் மறுபடி திருப்புவதற்கு சக்தியற்றவனாகிறான் என்று மிதிலைப் பெண்கள் எல்லோரும் ஸ்ரீ ராமபத்ரனைக் கண்டதால் உலகமெல்லாம் கொண்டாடும் பெருமை பெற்றவர்கள் என்பது இந்த சூர்ணிகையினால் ஸூசிக்கப்படுகிறது. இங்கு ‘யச்ச ராமம் ந பச்யேத்து யஞ்ச ராமோ ந பச்யதி | நிந்திதஸ் ஸ பவேல் லோகே

ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே ॥ என்று ஸ்ரீ ராமாயண ச்லோகம் ஸ்மரிக்கத்தக்கது. இதன் பொருள்:—எவன் ஸ்ரீராமபத்ரனைக் காணவில்லையோ, ஸ்ரீராமபத்ரனும் எவனைக் கடாக்ஷிக்கவில்லையோ, அவன் உலகத்தில் நிந்திக்கப்படுவான். அவன் உள்ளமும் அவனைப் பழிக்கும் என்று.

खण्डपरशुकोदण्डप्रकाण्डखण्डनशौण्डभुजदण्ड!

கண்டபரசுகோதண்டப்ரகாண்டகண்டனசௌண்டபுஜதண்ட

கண்டபரசு—சிவனுடையதான, கோதண்ட ப்ரகாண்ட—சிறந்த வில்லினுடைய, கண்டன—ஒடிப்பதில், சௌண்ட—பலம் பொருந்திய, புஜதண்ட—தண்டம் போன்ற புஜத்தை யுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) சக்ரவர்த்தி குமாரர்களுடன் மிதிலைக்குச் சென்ற விச்வாமித்ரமுனிவர் ஜநக மஹாராஜன் செய்த பூஜையைப் பெற்று மகிழ்ந்து ஜநகமஹாராஜனைப்பார்த்துக் கூறுகிறார். மஹாராஜனே! உமது முன்னோர்களால் பூஜிக்கப்பட்டு உமதரண்மனையிலுள்ள சிவவில்லை இவ்விரு புத்ரர்களுக்கும் காண்பிப்பீர் என்று. உடனே ஜநகமஹாராஜனும் பெருமிதத்துடன் முனிச்ரேஷ்டரே! சிறப்புடைய அவ்வில்லை ராமனுக்கும், லக்ஷ்மணனுக்கும் காண்பிக்கிறேன். இவ்வில்லுக்கு ஸ்ரீ ராமபத்ரன் நாணேற்றம் செய்வானேயாகில், அயோநிஜையான என் மகள் ஸீதையின் பாணிக்ரஹணத்தை இவனுக்கு முடித்திடுவேன் என்று ப்ரதிஜ்ஞை செய்து சிவவில்லைக் கொண்டுவரும்படி வேலைக்காரர்களுக்கு உத்திரவு செய்கிறான். பலம் பொருந்திய ஐயாயிரம் வேலைக்காரர்கள் எட்டு சக்கரங்கள் பூட்டிய பெட்டியிலுள்ள அவ்வில்லை மிக்க சிரமத்துடன் கொண்டுவருகின்றார். தேவர், அஸுரர், ராக்ஷஸர் முதலிய யாவராலும் வளைக்கப்பெறாத அவ்வில்லைக் கண்டதும் ஸ்ரீ ராமபத்ரன் அநாயாஸமாக எடுத்து நாணேற்றம் செய்து ஒடித்து விட்டான். இதனால் ஸ்ரீ ராமபத்ரனின் புஜபலம் ஸர்வலோகாதிசயிதம் என்பது புலப்படுகிறது. இங்கு ‹லீலயா ஸ தநுர் மத்யே ஜக்ராஹ வசநாந் முநே:। பச்யதாம் ந்ருஸஹஸ்ராணாம் பஹூநாம் ரகுநந்தந:॥ ஆரோபயித்வா தர்மாத்மா பூரயாமாஸ தத்தநு:। தத் பபஞ்ச தநுர்மத்யே நரச்ரேஷ்டோ மஹாயசா:॥ என்ற ஸ்ரீ ராமாயண ச்லோகங்கள் நினைக்கற்பாலன. இவற்றின் பொருள்—ஆயிரக்கணக்கான அநேகம் புருஷர்கள் பார்த்துக் கொண்டிருக்க கௌசிகமுனியின் கட்டளையினால் ஸ்ரீ ராமபத்ரன் அநாயாஸமாக அச்சிவவில்லை எடுத்தான். தர்மாத்மாவான ஸ்ரீ ராமபத்ரன் அவ்வில்லுக்கு நாணேற்றமும் செய்துவிட்டான். உரிய புகழ் பெற்ற புருஷோத்தமனான அவன் அவ்வில்லை நடுவில் முறித்து விட்டான் என்று.

10724

चण्डकिरणमण्डलबोधितपुण्डरीकवनरुचिलुण्टाकलोचन!

சண்டகிரணமண்டலபோதிதபுண்டரீகவநருசிலுண்டாகலோசந!

தேவர்களாலும் அஸுரர்களாலும் வளைக்கமுடியாத மஹிமை பொருந்திய சிவவில்லை, அஸ்த்ரப் பயிற்சி பெறாத மாநிடச் சிறுவனான ஸ்ரீ ராமபத்ரன் எப்படி அநாயாஸமாக ஒடிக்க முடிந்தது என்கிற சங்கையை இந்த சூர்ணிகையினால் நம் ஸ்வாமி நீக்கியருளு

கிறார். சண்டகிரண- வெங்கதிரோனாகிய சூர்யனுடைய, மண்டல- பிம்பத்தினால், போதித- மலர்ச்சியடைந்த, புண்டரீக-பத்மங்களுடைய, வந-கூட்டத்தின், ருசி-அழகை, லுண்டாக- அபஹரிக்கின்ற, லோசந- திருக்கண்களையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) 'தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ' (சூர்யனால் மலர்ச்சியுறும் புண்டரீகம் போல் அழகு பெற்றவை அப்பரமபுருஷனின் திருக்கண்கள்) என்று உபநிஷத்தில் கொண்டாடப்படும் பரம்பொருளே ஸ்ரீ ராமபத்ரனாக அவதரித்தபடியால் ஸ்ரீ ராமபத்ரன் சிவவில்லை ஒடித்தது சாலப்பொருத்தமான விஷயமே. பரமபுருஷனுக்கு ஆகாத கார்யமுண்டோ என்று. அன்றிக்கே சிவவில்லை ஒடித்தமாத்திரத்தினால் ஜநகன் செய்த ப்ரதிஜ்ஞைப்படி ஸ்ரீ ராமபத்ரன் ஸீதையை அடையவேண்டியவனே, ஆயினும் அழகுள்ள மணாளனையே மணப்பெண் விரும்புவாள்' என்ற உலக நீதிப்படி, எல்லா லக்ஷணங்களும் பொருந்திய ஸ்த்ரீரத்னமான ஸீதாதேவி மணத்திற்குரிய ரூபஸௌந்தர்யம் ஸ்ரீ ராமபத்ரனுக்கு உண்டோ என்னும் சங்கையை இந்த சூர்ணிகையினால் நம் ஸ்வாமி நீக்குகிறார். ஸௌந்தர்யத்தின் உயரிய நிலை கண்களின் அழகுதான். அப்படிப்பட்ட கண்ணழகினால் எல்லோரையும் தன் வசப்படுத்தும் சக்தி பெற்ற ஸ்ரீ ராமபத்ரன் அதிஸுந்தர மூர்த்தியாகையால் ஸௌந்தர்யமே உருவெடுத்ததோ என்று சொல்லப்படும் ஸீதாதேவியின் விருப்பத்துக்குகந்த மணாளனே என்பது ஸூசிக்கப்படுகிறது. உலகில் தூங்கியவனின் சொத்தையே திருடர்கள் கவருவார்கள். விழித்திருப்பவனின் சொத்தைத் திருடமாட்டார்கள். மேலும் பலர் விழித்திருக்கும்போது திருடவேமாட்டார்கள். ஸ்ரீ ராமபத்ரனின் திருக்கண்கள் உக்ரனான ராஜாவின் கட்டளையினால் விழித்திருக்கும் பலருடைய ஸர்வசொத்தையும் திருடுகின்றன. என்னே இக்கண்களின் திருடுவதில் ஸாமர்த்தியம்! என்கிற ரஸவத்தான பொருள் இச்சூர்ணிகையின் பதஸ்வாரஸ்யத்தினால் தோன்றுகிறது.

मोचितजनकहृदयशङ्कातङ्क! மோசிதஜநகஹ்ருதயஶங்காதங்க!

மோசித- அறவே ஒழிக்கப்பட்ட, ஜநக ஹ்ருதய- ஜநகமஹாராஜன் மனத்திலிருந்த, சங்கா, ஆதங்க- கவலையையும் பயத்தையும் உடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) யாக பூமியில் அயோநிஜையாக அவதரித்த ஸீதைப்பிராட்டியைத் தன் மகளாக ஏற்று வளர்த்து வந்த ஜநகமஹாராஜன், தனது பூர்வர்களால் போற்றப்பட்டுத் தன் அரண்மனையிலிருக்கும் சிவவில்லுக்கு நாணேற்றம்செய்து முடிக்கும் வீரனே தன் மகளான ஸீதையைக் கை பிடிக்கவேண்டியவன் என்ற கடும் ப்ரதிஜ்ஞை செய்து இதை உலகுக்குமறிவித்து விட்டான். இதையறிந்த அரசர்கள் யாவரும் ஸீதையை மணக்க விரும்பி மிதிலைக்குள் சென்று சிவவில்லை எடுக்கவும் சக்தியற்றவர்களாய்த் தங்கள் தேசம் திரும்பிச் சென்றுவிட்டனர். இவ் வரசகுமாரர்கள் யாவராலும் நாணேற்றம் செய்ய முடியாத நிலைமையில் சிவவில்லிருப்பதைக்கண்ட ஜநகமஹாராஜன் தான் செய்த ப்ரதிஜ்ஞை, நிறைவேறாது போய் விடுமோ என்று கவலை கொண்டான். ப்ரதிஜ்ஞை நிறைவேறாத காரணத்தினால் ஸீதை விவாஹமாகாமல் எப்போதும் இருந்துவர நேரிட்டால் கர்மயோகிகளவதரிக்கும் குலமென்று புகழ் பெற்ற தன் குலத்திற்கு அபக்யாதி நேருமே என்ற பீதியும் கொண்டார். ஸ்ரீ ராம

பத்ரன் சிவதநுர்பங்கம் செய்து இக்கவலையையும் பீதியையும் நீக்கிவிட்டான். சிவதநுர்பங்கத்தை நேரிலநுபவித்து வியப்பும் மகிழ்ச்சியுமடைந்த ஜநகமஹாராஜன் விச்வாமித்ர முனிவரிடம் கூறும் கீழ்வரும் பாலகாண்ட ச்லோகங்களால் இவ்வர்த்தத்தை யுணரலாம். ‘பகவந் த்ருஷ்டவீர்யோ மே ராமோ தசரதாத்மஜ: | அத்யத்புத மசிந்த்யஞ்ச ந தர்கிதமிதம் மயா || ஜநகாநாம் குலே கீர்த்தி மாஹரிஷ்யதி மே ஸுதா | ஸீதா பர்த்தாரமாஸாத்ய ராமம் தசரதாத்மஜம் | மம ஸத்யா ப்ரதிஜ்ஞா ச வீர்யசுல்கேதி கௌசிக ||’ என்று. இவற்வற்றின் பொருள்— மதிப்புக்குரிய கௌசிகமுனிவரே! தசரதசக்ரவர்த்தியின் குமாரனை ஸ்ரீ ராமனுடைய பலத்தை சிவதநுர்பங்கத்தினால் அறிந்து கொண்டேன். பதினாறு வயது நிரம்பப் பெறாத ராஜகுமாரன் எல்லோரும் ஆச்சரியப்படும்படி தநுர்பங்கம் செய்வனென்றும் என் மகள் ஸீதை தசரதகுமாரனான ஸ்ரீ ராமபத்ரனைப் பர்த்தாவாகப் பெற்று ஜநகர்களான எங்கள்குலத்திற்குக் கீர்த்தியைச்செய்வாள்என்றும்வீர்யத்தினால் சிவவில் நாணேற்றம் செய்யும் வீரனே ஸீதையை மணக்கவேண்டியவன் என்ற என் ப்ரதிஜ்ஞை ஸத்யமாகும் என்றும் நான் சிந்திக்கவே இல்லை’ என்று ராமபத்ரன் செய்த தநுர்பங்கத்தினால் ஜநகன் பயத்தையொழித்தான் என்பதை ‘ராஜா விகத ஸாத்வஸ:’ என்ற வால்மீகி முனிவர் வாக்கினாலறியவும். இப்படி சிவவில்லை ஒடித்து லோகோத்தரமான பலத்தை ப்ரகாசப்படுத்திய ஸ்ரீ ராமபத்ரனின் கைத்தலத்துக்கு முறைப்படி ஸ்ரீ ராமபத்ரன் மணம் செய்து கொண்ட ஸீதைப்பிராட்டியின் கொங்கை மேல் விளையாடுவதே தகுந்ததும் உயர்ந்ததுமான பயன். என்பதை ‘பரிஹ்ருத’ என்று தொடங்கும் சூர்ணிகையினால் ஸாதிக்கிறார்.

परिहृतनिखिलनरपतिवरणजनकदुहितृकुचतटविहरणसमुचितकरतल!

பரிஹ்ருத.நிகில நரபதி வரணஜநகதுஹித்ருகுசதடவிஹரண ஸமுசிதகரதல!

பரிஹ்ருத— நிராகரிக்கப்பட்ட, நிகிலநரபதி-எல்லா ராஜாக்களுடைய, வரண—கோரிக்கையை உடைய, ஜநகதுஹித்ரு— ஜநகன் மகளான ஸீதைப் பிராட்டியின், குசதட— கொங்கைப்புறத்தில், விஹரண—விளையாட்டத்திற்கு, ஸமுசித—மிகவும் தகுந்த, கரதல-கைத்தலத்தையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) மற்ற ராஜகுமாரர்கள் நாணேற்றம் செய்யவொண்ணாத சிவவில்லை ஒடிப்பதற்குத் தகுந்த கடின குணம் பெற்ற ஸ்ரீ ராமபத்ரன் கைத்தலம், ஸீதைப்பிராட்டியின் கொங்கைமேல் விளையாட்டம் செய்யும் பாக்யம் பெற்றது என்று. இதனால் கடின குணம், அழகு, விசாலகுணம் இவை நிரம்பியது ஸீதைப்பிராட்டியின் கொங்கை என்பது ஸூசிக்கப்பட்டது. விசாலமாயும் அழகாயுமுள்ளவிடத்தில் விளையாடுவதே மனதுக்குப் பிடித்தமானது என்பது ப்ரஸித்தம். இனி மஹாபராக்ரமசாலியான பரசுராமனைத் தோல்வியுறச் செய்து தன் ஸர்வேச்வர ஸ்வபாவத்தை ஸ்ரீ ராமபத்ரன் ப்ரகாசப்படுத்தினான் என்பதை ‘சதகோடி’ என்றும் ‘க்ரதுஹர’ என்றும் தொடங்கும் இரு சூர்ணிகைகளால் கூறி பாலகாண்ட சரித்திரத்தை முடிக்கக் கருதும் நம் ஸ்வாமி ‘சதகோடி’ என்று துடங்கும் முதல் சூர்ணிகையினால் பரசுராமன் கொடுத்த விஷ்ணு வில்லுக்கு நாணேற்றம்செய்ததால் ஸ்ரீ ராமபத்ரன் தன்னுடைய ஸர்வேச்வஸ்வபாவத்தை வெளிப்படுத்தினான் என்பதை வர்ணிக்கிறார்.

शतकोटिशतगुणकठिनपरशुधरमुनिवरकरधृतदुरवनमतमनिजधनुराकर्षणप्रकाशितपारमेष्ठ्य!

ஶதகோடிஶதகுணகடினபரஶுதரமுநிவரகரத்ருத துரவநமதம
நிஜதநுராகர்ஷணப்ரகாசிதபாரமேஷ்ட்ய!

சதகோடி— வஜ்ராயுதத்தைக்காட்டிலும் சதகுண- அநேகம் மடங்கு, கடின — கடின குணம் பொருந்தியதும், பரசுதர முநிவர-பரசு என்னும் ஆயுதத்தை தரிக்கும் பரசுராமமுனிவரின், கர— கையினுல், த்ருத—தரிக்கப்பட்டதும், துரவநமதம- பிறரால் நாணேற்றம் செய்யவொண்ணுததுமான, நிஜ— தன்னுடைய, தநு:— வில்லை, ஆகர்ஷண—பெற்றுக்கொண்டதால். நாணேற்றம் செய்ததாலென்றபடி. ப்ரகாசித-வெளியிடப்பட்ட, பாரமேஷ்ட்ய—பரம் பொருளான தன்மையையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) ஸீதையை மணந்த ஸ்ரீ ராமபத்ரன் தன் தம்பிகளோடும் தசரதசக்ரவர்த்தியோடும் கூடியவராய் அயோத்திக்குப் புறப்பட்டு வருகின்ருர். ஸ்ரீ ராமபத்ரன் செய்த சிவதநுர்பங்கத்தைக் கேள்வியுற்றதும் கடுஞ்சினம் கொண்டு பரசுராமமுனிவர் நடுவழியில் தோன்றி ஹேராம! நீ சிவவில்லை முறித்ததைக் கேள்வியுற்றேன். ஒரு காலத்தில் சிவதநுஸ்ஸும் விஷ்ணு தநுஸ்ஸும் விச்வகர்மா என்னும் தேவதச்சனுல் செய்யப்பட்டன. அந்த விஷ்ணுவில்லை பார்கவரான ருசீகமுனிவரிடம் விஷ்ணு ஒப்படைத்தார். ருசீகரும் தன் பிள்ளையும் என் தகப்பனுமான ஜமதக்நி முனிவரிடம் கொடுத்தார். ஜமதக்நியும் புத்ரனுன என்னிடம் கொடுத்திருக்கிருர். சிவவில்லை முறித்த நீ மஹிமை பொருந்திய இந்த விஷ்ணு வில்லில் நாணேற்றம் செய்து முடிப்பாயாகில் உன்னை வீர்யவானுக நான் மதிப்பேன் என்று கர்வத்துடன் கூறி யாராலும் நாணேற்றம் செய்யமுடியாத பெருமை பொருந்திய மஹா விஷ்ணுவில்லை ஸ்ரீ ராமபத்ரனிடம் கொடுத்தார். பரசுராமருடைய கர்வம் கலந்த வார்த்தையினுல் கோபமுற்ற ஸ்ரீ ராமபத்ரன் அவ்வில்லை வாங்கிக்கொண்டு நாணேற்றமும், பாணஸந்தாநமும் அனுயாஸமாகச் செய்து தன்னுடைய ஸர்வேச்வர ஸ்வபாவத்தை ப்ரகாசப்படுத்தினுன். இங்கு 'நிஜதநு:' என்பதால் ஸ்ரீ ராமபத்ரன் மஹாவிஷ்ணுவின் அவதாரம் என்பதை ப்ரகாசப்படுத்துகிருர் நம் ஸ்வாமி. 'நிஜ தநுராரோபண' என்று கூருமல் ஆகர்ஷண என்று நம் ஸ்வாமி ஸாதித்தருளியது 'ஸ்ரீ ராமன் பரசுராமரிடமிருந்து வில்லையும் விஷ்ணுசக்தியையும் ஆகர்ஷித்தார்' என்று கூறும் பாத்மபுராணத்தையநுஸரித்து. இங்கு தன் வில்லுக்கு நாணேற்றம் செய்ததால் ப்ரகாசித— ப்ரகாசம் செய்யப்பட்ட பாரமேஷ்ட்ய— ஸர்வேச்வரஸ்வபாவத்தையுடைய என்றுபொருள்கொள்வதுமுண்டு. 'அக்ஷயம் மதுஹந்தாரம் ஜாநாமி த்வாம் ஸுரேச்வரம் | தநுஷோஸ்ய பராமர்சாத் ஸ்வஸ்தி தேஸ்து பரந்தப ‖ என்கிற ஸ்ரீ ராமாயணச்லோகம் இவ்வர்த்தம் கொள்ளுவதற்குத் தக்கச் சான்ருகும். இதன் பொருள்— ஹேராம! இம்மஹாவிஷ்ணு வில்லை நீர் ஏற்று நாணேற்றம் செய்த காரணத்தினுல் பரசுராமனுகிய நான் அழிவற்றவரும் தேவதோத்தமருமாகிய ஸ்ரீ மந்நாராயணனுக உம்மை அறிந்து கொண்டேன். எதிரிகளை வருத்தும் வீரனே! உமக்கு மங்களமுண்டாகுக' என்று.

क्रतुहरशिखरिकन्तुकविहृत्युन्मुखजगदरुन्तुदजितहरिदन्तिदन्तदन्तुरदशवदनदमनकुशल

दशशतभुजमुखनृपतिकुलरुधिरझरभरितपृथुतरतटाकतर्पितपितृकभृगुपतिसुगतिविहतिकर-नतपरुडिषुपरिघ!

க்ரதுஹரசிகரிகந்துகவிஹ்ருத்யுந்முக ஜகதருந்துதஜிதஹரிதந்தி தந்ததந்துரதஸவதநதமநகுஸலதஸஸதபுஜமுக ந்ருபதிகுலருதிர-ஜரபரிதப்ருதுதரதடாகதர்ப்பிதபித்ருகப்ருகுபதிஸுகதிவிஹதி - கரநதபருடிஷுபரிக!

க்ரதுஹர- தக்ஷயாகத்தை அழித்த சிவனுடைய, சிகரி— வாஸஸ்தலமான கைலாஸ மலையாகிற, கந்துக— பந்திஞலே, விஹ்ருதி - விளையாடுவதில், உன்முக— முயற்சி செய்தவனும், ஜகத்— உலகத்திற்கு, அருந்துத— பீதிவிசேஷத்தைச் செய்கிறவனும், ஜித— ஜயிக்கப்பட்ட, ஹரி- இந்திரனுடைய, தந்தி—யானையான ஐராவதத்தினுடைய, தந்த—தந்தங்களினல், தந்துர— மேடுபள்ளமான உடலையுடையவனுமான, தசவதன—ராவணனுடைய, தமன-ஹிம்ஸிப்பதில், குசல—நிபுணனும், தசசதபுஜ- ஆயிரம் தோளுடையவனுமான கார்த்தவீர்யார்ஜுனனை, முக—முதலாகஉடைய, ந்ருபதிகுல— அரசர்களின் வம்சத்தின், ருதிரஜர—குருதி வெள்ளத்தினல், பரிதகி—ரம்பிய, ப்ருதுதர- மிகப்பெரிய, தடாக—தடாகங்களில், தர்ப்பித-தர்ப்பணம் செய்ததால் ஸந்தோஷப்படுத்தப்பட்ட, பித்ரு—தன் பித்ருக்களையுடைய, ப்ருகுபதி—ப்ருகுகுலத்திலுதித்த பரசுராம முனிவருடைய, ஸுகதி— அநேக புண்யங்களால் ஸம்பாதிக்கப்பட்ட திவ்யலோகங்களுக்கு, விஹதிகர—அழிவைச்செய்கிறதும், நத—வணங்கிய பருட்—களுக்கு உடையதுமான, இஷுபரிக-பரிகம் போன்ற பாணத்தையுடைய ஸ்ரீராமபத்ர!

(௧—ரு) விஷ்ணு வில்லை பரசுராமரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஸ்ரீ ராமபத்ரன் அவ்வில்லுக்கு நாணேற்றமும் பாணஸந்தானமும் செய்துகொண்டான். உடனே அமோகமான தன் பாணத்தைப் ப்ரயோகம் செய்து பரசுராமருடைய புண்யலோக மார்க்கத்தையழித்துவிட்டான். சிறந்த ப்ரபாவமுள்ளவனுக எதிரியைக்கூறி அவனை நாயகன் ஜயித்தான் என்று கதாநாயகனின் மஹிமையைக் கூறுவதும் கவிகளினியல்பு. ஆகையால் நம் ஸ்வாமியும் இங்கு பரசுராமமுனிவரின் ப்ரபாவத்தை விசேஷமாகக் கூறுகிருர். கார்த்தவீர்யார்ஜுனன் முதலிய க்ஷத்ரியர்களின் குலத்தையழித்து அவர்களின் குருதி வெள்ளத்தினல் நிரம்பிய தடாகத்தில் தன் பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்தவன் பரசுராமன் என்றவிடத்தில் கவனிக்கவேண்டிய கதை வருமாறு:—

பரசுராம முனிவரின் ஓமப்பசுவின் கன்றை கார்த்தவீர்யார்ஜுன ராஜாவின் புத்ரர்கள் திருடிப்போனூர்கள். இதையறிந்து சினம் கொண்ட பரசுராமர் கார்த்தவீர்யார்ஜுனனேடு போரிட்டு முடிவில் அவனைக் கொன்றுவிட்டார். இதனல் கோபமுற்ற கார்த்தவீர்யார்ஜுன குமாரர்கள் பரசுராம முனிவரின் பிதாவான ஜமதக்னி முனிவரைக்கொன்றுவிட்டனர். தன் பிதா க்ஷத்ரியர்களால் கொல்லப்பட்டார் என்பதையறிந்து கடுஞ்சினமடைந்த பரசுராமரும் 'பூமியிலுள்ள க்ஷத்ரியர்களையெல்லாமழித்திடுவே'னென்று ப்ரதிஜ்ஞை செய்து கொண்டு கார்த்தவீர்யகுமாரர்களையும் மற்ற அரசர்களின் குலங்களையும் 21 தடவை

அழித்து அவர்களின் குருதி வெள்ளத்தினால் நிரம்பிய, குருக்ஷேத்ரத்திலுள்ள சமந்த பஞ்சகமென்ற குளங்களில் பித்ரு தர்ப்பணம் செய்தார் என்று. இக்கதை பாரதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. இங்கு கார்த்தவீர்யனைக் கொன்ற பரசுராமன் என்று கூறும்போது நம் ஸ்வாமி கார்த்தவீர்யனின் மஹிமையைக் கூறுகிறார்— அது வருமாறு:—

திக்விஜயம் செய்துவரும் ராவணன் ஒரு ஸமயம் நர்மதையில் ஜலக்ரீடை செய்யும் கார்த்தவீர்யனுடன் போர் செய்ய வந்தான். போரில் தளர்ச்சியடைந்த ராவணனை கார்த்தவீர்யன், தன் ஆயிரம் கைகளாலும் கருடன் ஸர்ப்பத்தை எடுப்பதுபோல் பலமாகத் தூக்கிக்கொண்டுபோய் சிறையிலிட்டான். பிறகு ராவணன் ப்ரார்த்திக்க அவனிடம் கருணை கொண்டு அவனை மன்னித்து சிறையிலிருந்து நீக்கி விட்டான் என்பது கார்த்தவீர்யனுடைய வரலாறு. ராவணன் பெருமையைக் கூறுமுகமாக அவனைச் சிறையிலிட்டவன் கார்த்தவீர்யன் என்று கார்த்தவீர்யனின் பெருமையை வெளிப்படுத்துகிறார் நம் ஸ்வாமி. கைலாஸமலையை பந்து விளையாட்டு செய்வதற்காக எடுக்க யத்தனித்தவன் என்றும் எல்லா உலகத்துக்கும் தன் பலத்தினால் பெரும் பீதியையளித்தவனென்றும் ராவணனைக்கூறுகிறார். இங்கு சிவனை க்ரதுஹர, என்று கூறுவதிலுள்ள கதையாவது— ப்ரஹ்மகுமாரனான தக்ஷப்ரஜாபதி என்பவர் சிவத்வேஷங்கொண்டவர். ஆகையால் தான்ஆரம்பித்த ப்ருஹஸ்பதிஸவமென்ற யாகத்தில் சிவனுக்குரிய பாகத்தையளிக்காமலிருந்துவிட்டார். சிவபத்நியும் தக்ஷன் மகளுமான ஸதீ என்பவள் யாகத்தை தர்சிக்க வந்தவள் தன் பர்த்தாவுக்கு ஏற்பட்ட அவமதிப்பு தாங்காமல் யோகாக்நியால் தன் தேஹத்தை எரித்து விட்டாள். இவற்றையறிந்த சிவன் வீரபத்ரன் என்பவனை தன் ஜடை மூலமாக உண்டுபண்ணி அவன் மூலமாக தக்ஷயாகத்தையழித்திட்டார் என்று. மேலும் தோற்ற இந்திரனின் ஐராவத யானையின் தந்தங்களினால் மேடுபள்ளமான உடலையுடையவன் ராவணன் என்று கூறுகிறார். இதனால் இந்திரனோடு இராவணன் போரிட்டபோது ஐராவதயானை தன்னுடைய தந்தங்களினால் இராவணனை முட்ட அந்த தந்தங்கள் பட்டதால் ஏற்பட்ட காயங்கள் இராவணனுடலிலேற்பட்டு அவற்றால் இராவணனுடல் மேடுபள்ளமாயிற்றென்பது பெறப்படும். இப்படி மஹாப்ரபாவசாலியான பரசுராமவிஜயம் செய்த ஸ்ரீ ராமபத்ரனை வர்ணித்த நம் ஸ்வாமி பாலகாண்ட கதையை ஸங்கிரஹமாக ஸாதித்தருளினார். இனி ஸநாதந தர்மரக்ஷணம் ஒன்றே எம்பெருமானவதரிப்பதற்குப் ப்ரயோஜனம் என்பதைக் கூறப்புகுகிறார் நம் ஸ்வாமி— இங்கு முதலறியவேண்டிய கதை நிகழ்ச்சி வருமாறு:—

கோசல நாட்டில் வாழ்ச்சியுறும் பெண்களும் புமான்களும் குழந்தைகளும் கிழவர்களுமாகிய மக்களனைவரும் ஸ்ரீ ராமபத்ரனின் கல்யாண குணங்களால் வசீகரிக்கப்பட்டவர்களாய் தசரத சக்ரவர்த்தியிடம் சென்று வணங்கி மஹாராஜனே! பலம் பொருந்திய மஹாபாஹுவான ஸ்ரீ ராமபத்ரனின் யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்யப்பெற்று, சத்ருஞ்ஜயமென்னும் பட்டத்துயானையின் மீதேறி இருமருங்கும் சாமரம் வீசப்பெற்று நம் அயோத்திமாநகர் வீதிகளில் பவனி வருவதைக்கண்டு களிக்க விரும்பும் எமது கோரிக்கையைத் தாங்கள் பூர்த்தி செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்தனர். சக்ரவர்த்தியும் மிக்க ஸந்தோஷம் பூண்டவராய் புஷ்யநக்ஷத்திரம் கூடிய மறு தினமே யுவராஜ பட்டாபிஷேகம் செய்வதாக மந்திரி

(தொடரும்)

ஸ்ரீ:

அடியேன் கண்ட தத்க்ரதுந்யாயம்

ஸ்ரீஸந்நிதி ஸஞ்சாரத்தில் புரிசைக்கெழுந்தருளவேணுமென்கிற விஷயத்தை ஸ்ரீஸந்நிதியில் பிரார்த்திக்கும்படி ஊரார் அடியேனை நியமித்தார்கள். ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு சிஷ்யனிடத்தில்தான் அதிக வாத்ஸல்யமென்பதை ப்ரஹ்லாதனிடத்தில் காட்டியிருக்கிறபடியால் ப்ரஹ்லாதனைப்போல் பக்தியில்லாவிடினும் சிசுத்வமாத்ரத்தைக்கொண்டு என்னுடைய ப்ரார்த்தனையைத் தலைக்கட்டுவன் என்றோ? ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் அதிக பரிசயமும் அனுக்ரஹமும் பெற்றவன் என்றோ நம்மை அனுப்புகிறார்கள் என்ற உத்ஸாஹத்தால் அடியேனும் அதை அங்கீகரித்துக் கொண்டுபோய் பிரார்த்தித்தேன். அடியேனுடைய பிரார்த்தனையைத் திருவுள்ளமுகந்து அங்கீகரித்து 18–12–55 ல் புரிசைக்கு எழுந்தருளியாயிற்று. அடியேனுடைய குடிசையிலேயே பெருமாள் எழுந்தருளியிருந்து ஸ்ரீ அழகியசிங்கர் ஆராதனம் செய்ததை ஸேவித்தபோது 'ப்ரஸாதபரமௌ நாதௌ மம கேஹமுபாகதௌ' என்கிறபடியே அடியேன் உள்ளம் பூரித்துப் போனேன். பிம்மாலை தநுர்மாத ஆராதனம் ஆனபிறகு ஸ்ரீ அழகியசிங்கர் அநுஷ்டாநமாகி மறுபடியும் அபிகமநாராதனமாகி திருப்பாவை சாற்றுமுறை நாள் பாட்டு வாழித்திருநாமம் கோஷ்டி தீர்த்தம் சடாரியாகி கோதாஸ்துதி அநுஸந்தானத்துடன் விநியோகமும் நடந்தது. உடனே வேதபாராயணம் நடந்து ஸமாச்ரயண பரந்யாஸங்கள் நடந்தன. மறுபடியும் பகல் பத்து உத்ஸவத்திற்காக (திருமொழி திருநாளுக்காக) ஸேவை துடங்கி பெருமாள் திருமொழி ஸேவிக்கப்பட்டதும் பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் மாத்யாஹ்நிக ஸ்நாநத்திற்கு எழுந்தருளி அநுஷ்டாநமாகி மறுபடியும் மங்களஹாரத்திக்கெழுந்தருளி மங்களஹாரத்தி நடந்து பெருமாள் திருமொழி சாற்றுமுறையாகி ததீயாராதனை நடந்தது. இதேமாதிரி இந்த தநுர்மாதத்தில் தநுர்மாஸாராதனமும் பகல் பத்து உத்ஸவமும் நடந்துவருவதை ஸேவித்த அடியேனுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் விஷயத்தில் யதாக்ரதுந்யாயம் எப்படி பொருந்தியிருக்கிறது என்பது மனத்தில் உதித்தது.

அதாவது:— ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் திருமாளிகையில் சுமார் நூறு வருஷ காலமாக விக்ரஹாராதனம் (ஸ்ரீ கண்ணன் திருவாராதனம்) நடந்துவரும் விஷயம் இரண்டு தேசத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் தெரிந்த விஷயம். அநேகமாக ஸ்ரீ ஸந்நிதியில் நடக்கும் க்ரமத்தை ஒட்டியே எல்லாம் நடக்கும். கனகம்மா, ஸ்ரீரங்கம்மா என்று ப்ரஸித்தமாகவிருந்த அவர்கள் காலத்திலும் அந்தப் பெருமாளுக்கு தனி ஆராதகர்கள் ஏற்படுத்தி அவர்களை ஆத்தோடு வைத்துக் கொண்டு ஸ்ரீ ஸந்நிதியில் ஆராதகர்களுக்குள்ள கௌரவமும், மரியாதையும் ஸம்பாவனையையும் கொடுத்து ஆராதனம் விடாமல் நடக்கும்படி செய்து வந்தார்கள். அந்த கனகம்மா தான் திருவுள்ளூர் ஸ்ரீ வீரராகவனுக்கு ஸ்வர்ண த்வஜஸ்தம்பம் செய்து வைத்தது. அந்த த்வஜஸ்தம்பத்தில் அவர்களுடைய த்ரிபுருஷ வம்சாவளியும் எழுதி கைங்கர்யம் செய்யப்பட்டதும் எழுதப்பட்டிருக்கிறது. அப்படியே காஞ்சீபுரத்தில் தேவப்பெருமாளுக்கு வஸந்த மண்டபம் அவளாலே கட்டப்பட்டது. சில திருவாபரணங்களும் ஆங்காங்கு ஸமர்ப்பித்திருக்கிறாள். இப்பொழுது ஸ்ரீ ந்ருஸிம்ஹன் சாத்திக்கொண்டிருக்கும் கல்லிழைத்த திருமார்பு நாச்சியார் பதக்கம் அவளால் ஸமர்ப்பிக்கப்பட்டதே. அப்படியே அந்தப்பதக்கத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. அதேமாதிரி ஸ்ரீரங்கம்மாவும் தேரழுந்தூர், உப்பிலியப்பன் ஸந்நிதிகளில் த்வஜஸ்தம்பமும் செய்து மற்றும் திருவாபரணங்களும் ஸமர்ப்பித்திருக்கிறாள். ஸ்ரீ அழகியசிங்கரும் குலக்ரமமாக்வந்த கண்ணன் திருவாராதனத்தை பூர்வாச்ரமத்தில் செய்தருளும்போது அடியேன் ஸேவித்திருக்கிறேன். ஆலயப்ரவேசத்தால் ஸ்ரீ திரு

விண்ணகரப்பன் ஸந்நிதிக்கு எழுந்தருளுவது
நின்றிருந்தகாலத்தில் ஸ்ரீ கண்ணன் ஸந்நிதியில்
இந்த பகல்பத்து இராப்பத்து உத்ஸவத்தை
நடத்தியாயிற்று. அங்கும் ரஜதத்திலும்,
ஸ்வர்ணத்திலும் ஸ்ரீ கண்ணன் எழுந்தருளி
யிருக்கிறார்கள். ஸ்வர்ணத்தில் பட்டாபிராம
னும் யதோசிததிருவாபரணங்களும் கலசத்து
டன் சித்ரரூபமாக அழகான மண்டபமும்
வெள்ளி டோலையும், வெள்ளிமண்டபத்தில்
எழுந்தருளியிருக்கும் பரிணமத்தில் நம்மாழ்
வார், கலியன், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ தேசிகன்
இவர்கள் வெள்ளியிலும், ஆழ்வார்களுக்கொத்து
ஆண்டாளும் எழுந்தருளப் பண்ணப்பட்டு
பெருமாள் ஸந்நிதி தனியாக க்ருஹமத்தியில்
அமைந்திருக்கிறது. ஆகவே அங்கு திருவாரா
தனம் முதலியவற்றைச் செய்தது உபாஸந
தசைமாதிரியென்றும், இப்பொழுது ஸ்ரீ ந்ரு
ஸிம்ஹனை ஆராதிக்கும் தசை பலதசை
என்றும் ‘உபாஸிதகுணாதேர் யா
ப்ராப்தாவப்யபஹிஷ்க்ரியா। ஸா தத்
க்ரதுநயக்ராஹ்யா நாகாராந்தர வர்
ஜநம்’ என்றபடி உபஸிதகுணங்களுடன்
அதிகப்படி குணங்கள் பலதசையில் வருவ
தொப்ப அதிகப்படி அநுபவம் இப்பொழுது
நேர்ந்திருக்கிறது. அத்துடன் உபாஸநதசை
யில் உபாஸநாநுக்ராஹகங்களான வர்ணாச்ரமா
நுபந்தியான தர்மங்கள் பலதசையில் கழிக்கி
றாப்போல் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் அந்த
காலத்தில் ஆராதநாநுக்ராஹகங்களான ஆச்ரம
ப்ரதாநாநுபந்திதர்மங்கள் இப்பொழுது இல்
லாமலிருக்கின்றன.

‘எங்குமுளன் கண்ணன்’ என்ற பாசுரப்படி
கண்ணன் ஆராதனம் உபாயதசையிலும் கண்
ணனுடைய வ்யாப்தியை ஸத்தியமாகப் பண்
ணின ஸ்ரீ ந்ருஸிம்ஹாராதனத்துடன் ஸ்ரீ கண்
ணனாராதனமும் பலதசையில் நேர்ந்திருக்கி
றது மிகவும் பொருத்தமா யிருக்கிறது.
ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யப்ரபந்த வேதபாரா
யண கோஷ்டிகளிலும் அந்வயித்து தாம் கைங்
கர்யம் செய்யும்போது பரமபதஸோபானத்தி
லுள்ள ‘பூவளருந் திருமாது புணர்ந்த
நம் புண்ணியனார் தாவளமான
தனித்திவஞ்சேர்ந்து தமருடனே
நாவளரும்பெருநாள் மறையோதிய
கீதமெல்லாம் பாவளருந் தமிழ்ப்
பல்லாண்டிசையுடன் பாடுவமே’
என்ற பாசுரப்படி ‘முக்தாநுபூதி மிஹ
மே தாஸ்யதி’ என்றபடி இல்லாமல் ‘முக்
தாநுபூதி மிஹ மே ப்ரததௌ ந்ரு
ஸிம்ஹ:’ என்று ஸாதித்து வருவதும்
இதற்குப் பொருத்தமாயிருக்கிறது.

ஸ்ரீ அழகியசிங்கருக்கு பெருமாள் ஆராத
னத்தில் குதூஹலமும், சிரத்தையும் பால்யம்
முதலே ஏற்பட்டதாம். ‘ய: பஞ்ச ஹாய
நோ மாத்ரா ப்ராதராசாய யாசித:।
தந்நைச்சத் ரமயந் யஸ்ய ஸபர்
யாம் பாலலீலயா ॥’ என்று உத்தவரிருந்
ததுபோலும், ‘காரியம் நல்லனகளவை
காணில் என் கண்ணனுக்கு’
என்பது போலும், ‘சங்குசக்கரம் தண்டு
வாள் வில்லுமல்லது இமைக்கலு
றுள்’ என்பது போலவும் ஏற்பட்டதாம்.
அந்தமாதிரி பகவத்விஷயத்திலேயே ஆசை
யேற்படுவதையுகந்து திருத்தகப்பனாருந்திருத்
தாயாரும் அதற்கு வேண்டிய உபகரணங்களை
செப்பனிட்டுக் கொடுப்பார்களாம்.

இப்பவும் அந்தத் திருமாளிகையில் ஸ்ரீ அ
ழகியசிங்கர் பால்யத்தில் ஆராதித்த (உத்ஸ
வம் முதலியது செய்து விளையாடிய) தாருமய
மான ஸ்ரீநிவாஸன் வெள்ளிக் கவசத்துட
னும் கருடவாஹனம் சேஷவாஹனம் முதலிய
வாஹனங்களும் நவராத்ரி காலங்களில் கொலுக்
களில் வைத்திருக்கிறார்கள். இப்படி ஆதி
முதல் ஏற்பட்ட பக்தியின் பரீவாஹத்தினால்
தான் இம்மாதிரி ஆராதனத்தில் சிரமமே
தட்டாமல் குதூஹலமே ஓங்கி வருகிறது.

ஸ்ரீ அழகியசிங்கர் திருத்தாயாருக்கு நாலா
யிரமும், தேசிகப்ரபந்தத்துடன் முகஸ்தமான
படியால் அதை நாட்டுப்பெண்களுக்கும் பெண்
களுக்கும் ஸந்தை சொல்லி ப்ரவசனமும் பண்
ணியிருக்கிறபடியால் அருளிச்செயலில் அந்த
குடும்பத்துக்கு ஒரு விசேஷமான ஈடுபாடு.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ஸூ உத்தராயணம் ஹேமந்த ருது - மகரமீ 1956 ஜனவரி - பிப்ரவரி]

14-1-56	தைமீ 1வ	சனிக்கிழமை	*மகரரவி 23-59; உத்தராயணபுண்யகாலம்; ஸங்க்ராந்தி பண்டிகை; திருப்பாவை சாற்று முறை; மகரசுக்லத்விதீயைதிதி.*
17-1-56	4வ	செவ்வாய்க்கிழமை	பஞ்சமி திதி.
24-1-56	11வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
25-1-56	12வ	புதன்கிழமை	திருவாதிரை; **38**-வதுபட்டம் ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
27-1-56	14வ	வெள்ளிக்கிழமை	○ பூர்ணிமை.
29-1-56	16வ	ஞாயிற்றுக்கிழமை	மகம்; திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்.
30-1-56	17வ	திங்கட்கிழமை	த்ருதீயைதிதி.
31-1-56	18வ	செவ்வாய்க்கிழமை	சதுர்த்தி - பஞ்சமி திதித்வயம்.
1-2-56	19வ	புதன்கிழமை	ஷஷ்டி திதி; ஹஸ்தம், ஸ்ரீ கூரத்தாழ்வான்திருநக்ஷத்ரம், ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ் ஆரம்பம்.
3-2-56	21வ	வெள்ளிக்கிழமை	அஷ்டமி திதி.
4-2-56	22வ	சனிக்கிழமை	அதிதி.
7-2-56	25வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி.
10-2-56	28வ	வெள்ளிக்கிழமை	உத்திராடம்; 42-வது பட்டம் ஸ்ரீஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
11-2-56	29வ	சனிக்கிழமை	● அமாவாஸ்யை.
12-2-56	30வ	ஞாயிற்றுக்கிழமை	ப்ரதமைதிதி; கும்பரவி 51-15

[சிசிர ருது - கும்பமீ]

13-2-56	மாசி மீ 1வ	திங்கட்கிழமை	விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; கும்ப சுக்ல த்விதீயை திதி.
18-2-56	6வ	சனிக்கிழமை	ரதஸப்தமி.
22-2-56	10வ	புதன்கிழமை	ஏகாதசி.
23-2-56	11வ	வியாழக்கிழமை	த்வாதசி-த்ரயோதசி திதித்வயம். புனர்வஸு; குலசேகராழ்வார்திருநக்ஷத்ரம்; புஷ்யம்; 37-வது பட்டம் ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ரமஹா தேசிகன் திருநக்ஷத்ரம்.
25-2-56	13வ	சனிக்கிழமை	○பூர்ணிமை;மஹாமகம்.

அதனாலேயே பெரியாழ்வார் திருமொழி ஐயபுழுதியுடன்படி, தன் உள்ளம் நாடொறும் தட்டுளுப்பானபடியையும் இப்போது தாங்கள் ஒதுங்கியிருக்கும்படியையும் நினைத்து நொந்து வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கிறபடி.

பக்தியின் பரீவாஹமாக வெளிவந்ததை ஓலையிலிட்டனம் யானிதற்கென்.

ஸ்ரீ:

பட்டாபிஷேக ஸ்ரீமுகம்

(14-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நம் அழகியசிங்கருக்கு ஸந்யாஸாசரமத்தில் அநுஸந்திக்கப்பட்டு வந்த தனியன்கள் மூன்று. அவையாவன:—

अस्त्यत्रैको विशेषो बुध इति शठजिल्लक्ष्मणाभ्यां मुनिभ्यां
एकीभूयोदिताभ्यामिव निरुपधिकं प्रेक्षितं सद्गुरुभ्याम् ।
वेदान्तद्वन्द्वमन्त्रत्रयविवृतिमुखे शिक्षितं क्षान्तिमुख्यैः
आढ्यं श्रीवीररघ्वीट् शठमथनगुरुं संयमीन्द्रं नमामि ॥

(கருத்து) இதில் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கருடைய திருவடி ஸப்பந்தம் மிக ஆதரத்துடன் அநுஸந்திக்கப்படுகிறது. ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கருக்கு ஸ்ரீ சடகோபராமாநுஜன் என்று திருநாமம். இந்த திருநாமத்தில் முன் பாகம் நம்மாழ்வாரையும், பின்பாகம் எம்பெருமானாரையும், குறிக்கின்றது. நம்மாழ்வாரும், எம்பெருமானாரும், ஒன்று சேர்த்து ஒரு உருவத்தைத் தரித்துக்கொண்டு அநுக்ரஹிக்க அவதரித்தாப் போல் இருக்கிறது சடகோபராமாநுஜன் என்ற திருநாமத்துடன் விளங்கிய ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் அநுக்ரஹம் செய்தது. அதிலும் இந்த ஸ்வாமியிடம் 'வித்வான்' என்று ஓர்விசேஷமுண்டு என்று அடிக்கடி அத்திப்பட்டு அழகியசிங்கர் அநுக்ரஹித்தாவதுண்டாம். '**अस्त्यत्रैको विशेषो बुध इति**' என்ற பாகம் இதை வெளியிடுகின்றது. இப்படி அவ்விருவர்களாலும் அநுக்ரஹிக்கப்பட்டும் உபயவேதாந்தங்களிலும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலியவைகளிலும், நன்கு விநீதராயும், சமதமாதி குணங்கள் நிறைந்துமிருக்கிற ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்த்ர மஹாதேசிகனை வணங்குகிறேன். ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் அநுக்ரஹித்த ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் விஷயமான அசார்யஸப்ததி க்ரந்தத்தில் *14-வது ச்லோகம் இதற்குச் சான்றாகும்.

श्रीशठारिशठारातिरामानुजपदाश्रयम् । ख्यातं श्रीवीररघ्वीशशठारिमुनिमाश्रये ॥

(கருத்து) 33-வது பட்டம் ஸ்ரீ சடகோபயதீந்த்ர மஹாதேசிகன், 34-வது பட்டம் ஸ்ரீ சடகோபராமாநுஜயதீந்த்ர மஹாதேசிகன் இவ்விருவர்களுடைய திருவடிகளை யாச்ரயித்து ஜகத்ப்ரஸித்தரான ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகனை அடைகிறேன்.

शठारिरामावरजपादुकापरिचारिणे । श्रीमद्वीररघूत्तंसशठारिमुनये नमः ॥

(கருத்து) ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் பாதுகைகளை பரிசர்யை பண்ணுகின்ற ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனை வணங்குகிறேன்.

श्रीमते श्रीवण्शठकोप श्री वीरराघवशठकोपयतीन्द्रमहादेशिकाय नमः

---

* निर्वोढा नामरूपं नृमृगपरिबृढस्त्वस्य वेदान्तयुग्मे
निर्बाधामेयमेधां हृदि परिकलयन् श्रीशठद्विड्यतीन्द्रौ ।
आविष्टौ शिष्यरक्षार्थमिति तदुभयं नामरूपं गुरौ स्यात्
इत्यालोच्यैनमर्थं शठरिपुयतिराजाख्यया व्याचकार ॥ आचार्यसप्तति 14 श्लो

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதமும் ஸ்ரீ அப்பையதீக்ஷிதரும்

ஸ்ரீ விசிஷ்டாத்வைதத்தை அந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் பெருமையாகப் பேசினாலும் பிறமதத்தினர் அதைப்பற்றி எவ்விதம் நினைத்தனர் என்பதை நிரூபிப்பதே இந்த வியாசத்தின் நோக்கு.

ஸ்ரீதேசிகன் பல க்ரந்தங்களால் நன்கு ப்ரதிஷ்டை செய்த பிறகு விசேஷ ஊக்கத்துடன் இம்மதத்தைப் படித்தவர்களுள் இருவர் முக்யராவர்—ஒருவர் ஸ்ரீ வித்யாரண்ய யதிகள். இரண்டாவது ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர், இவர்களுள் வித்யாரண்யயதிகள் ஸ்ரீ தேசிகன் ஸமகாலத்திலிருந்தவர். (கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள விஜயநகரம் சரித்திரத்தைப் பார்க்கவும்.) அவர் ஸ்ரீ தேசிகனை நேரில் சந்தித்தும் அவர் இயற்றிய க்ரந்தங்களைப் படித்தும், விசிஷ்டாத்வைதத்தை நன்கு உணர்ந்தவர். அந்த யதிகள் எழுதியுள்ள ஸர்வதர்சன ஸங்கிரஹத்தில் ஸ்ரீ ராமாநுஜ தர்சனத்தை நிரூபிக்கும்போது தத்வமுக்தாகலாபத்திலிருந்து ச்லோகங்களை உதாஹரித்துள்ளார்.

ஸ்ரீ தேசிகன் ஸூக்திகளிலுள்ள ‘கிரவதேததுக்த்வா சிரஸ்ஸு நிஹிதம் மயா பதமதக்ஷிணம்’ ‘ச்ருதிச்ரேணீ சூடாபதபஹுமதே’ முதலிய சொற்களைப் படித்தும் அவைகளை ஸஹித்துக்கொண்டிருந்திருப்பாரென நினைக்க முடியாது. நேருக்கு நேராக இருவருக்கும் பல நாள் வாதம் நடந்தது. ஒவ்வொரு நாளும் வாதமுடிவில் வித்யாரண்யருக்குத் தோல்வியே கிடைத்தது. அவ்விஷயம் ஆசார்ய சம்புவில் காணலாம். ஆகவே அந்த யதிகள் விசிஷ்டாத்வைதத்தை தூஷிக்கவோ ஸ்ரீதேசிக ஸூக்திகளுக்குக் கண்டனங்களை எழுதவோ துணியவில்லை.

அந்த யதிகளுக்குப் பிறகு மிகுந்த சாஸ்த்ர பாண்டித்யம் படைத்தவர் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் அவர்களே. அவர் ஸ்ரீ ராமாநுஜ மத நூல்களை நன்கு படித்தவர் என்பது நயமயூகமாலிகா, கல்பதரு, முதலிய க்ரந்தங்களால் அறியலாம். அவர் சததூஷணீ, தத்வமுக்தாகலாபம் முதலிய அத்வைத கண்டன நூல்களை நன்றாகப் படித்திருந்தும் அதற்குப் பரிஹாரமாக ஒரு நூலும் எழுதவில்லை. தவிர ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தில் ஈடுபட்டாரென்றும் நம்பமுடிகிறது. ஸ்ரீ யாதவாப்யுதயத்தின் வியாக்யானத்தில் தீக்ஷிதாவர்கள் கூறுவதாவது:—‘இத்தம் விசிந்த்யா: ஸர்வத்ர பாவாஸ் ஸந்தி பதே பதே | கவிதார்கிக ஸிம்ஹஸ்ய காவ்யேஷு லலிதேஷ்வபி’ ‖ என்று ஸ்ரீ தேசிகன் திருநாமத்தைக்கூட உச்சரிக்கக் கூசி ஸ்வாமியின் பிருதத்தையே விசேஷ்ய வாசகமாகநிர்தேசித்தது ஸ்வாமியின் பாண்டித்யத்திலுள்ள பஹுமதியைக் காட்டுகின்றது. ஸ்வாமி அருளிச்செய்த பாதுகாஸஹஸ்ரத்தைப் பூர்ணமாகப் படித்துவிட்டு தீக்ஷிதரவர்கள் ‘ஓர் சாண் கட்டையில் ஆயிரம் துளைகள் போட்டவர்’ என்று ஸ்துதித்ததாகக் கர்ணபரம்பரை கூறுகின்றது. ஆகவே ஸ்ரீதேசிகன் பாண்டித்யத்தில் தீக்ஷிதர் ஈடுபட்டிருந்தார். இது நல்ல பண்டிதர்களுக்கு இயல்பு. பின்ன ஸம்ப்ரதாயஸ்தர்கள்கூட இவ்விதம் பிறர் பாண்டித்யத்தில் மிகவும் ஈடுபட்டனர். ஸ்ரீதேசிகன் சததூஷணியில் 65-வது வாதத்திலத்வைதாசார்யரைக் குறிப்பிடும்பொழுது ‘கரதலாமலகீக்ருத ஸகல ஸ்ம்ருதீதிஹாஸ புராணார்த்தை: ஸமஸ்தந்யாய ஸார்த்தவாஹை: பரமஹம்ஸ பரிவ்ராஜக பரிப்ருடை: பகவச்சங்கராசார்யை: அசேஷோபநிஷத்ஸ்ம்ருதி ஜலதி ஸுலாயா முபதேச ஸஹஸ்ரிகாயாம்’ என்றும், மஹாஸித்தாந்தாரம்ப ச்ருதப்ரகாசிகையில் ‘பஹு சாஸ்த்ரஜ்ஞாநாம் பஹு க்ரந்தகாராணாமபி பரேஷாம்’ என்றும் ஸ்ரீ சங்கரபகவத்பாதர்களுடைய பாண்டித்யத்தைப் புகழ்ந்துள்ளார்கள். ஆகவே மதத்தை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் பாண்டித்யத்தை மெச்சிப் பேசுவது பெரியோர்களியல்பு.

தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ தேசிகன் பாண்டித்யத்தில் ஈடுபட்டது மாத்திரமன்றி பகவத்ராமாநுஜ ஸம்ப்ரதாயத்திலும் ஈடுபட்டாரென்பது அவர் க்ரந்தங்களால் அறியலாம். தீக்ஷிதாவர்கள் செய்துள்ள மத்வமுகமர்தனம் என்ற நூலில் அடியிற்கண்ட வசனம் காணப்படுகிறது. ‘ததாப்யாநந்த தீர்தீயம் மதமக்ராஹ்யமேவ ந: | யத்ர வைதிக மர்யாதா பூபஸ்யாகுலதாம் கதா ‖’ இந்த ச்லோகத்தில் மத்வா

சார்ய மதம் தங்களுக்குக் க்ராஹ்யமல்லவென்பதால் ஸ்ரீ பகவத்ராமாநுஜமதம் தங்களுக்கு க்ராஹ்யமென்பது, த்வனிக்கிறது. மேலும் மத்வமதத்தில் வைதிகமர்யாதை குழப்பப்பட்டுள்ளதென்பதால், ஸ்ரீ ராமாநுஜமதத்தில் வைதிகமர்யாதை பரிபாலிக்கப்பட்டுள்ளது என்பதும் த்வனிக்கிறது. அச்ச்லோகவ்யாக்யானத்தில் இவ்வர்த்தம் ஸ்பஷ்டமாகவே விவரிக்கப்பட்டுள்ளது. 'யத்யப்யேவமுக்தயா ரீத்யா அந்யதீயாநி (பகவத்ராமாநுஜீயாநி) ஸகுணயோஜநாந்யுபாதேயாநி| அந்யதீயேஷு (ஸ்ரீராமாநுஜீயேஷு) யோஜநேஷு ஸகுண நிர்குண பேதாபேத விஷயதயா கதிபயேஷ் வேவஸூத்ரேஷு ப்ரகாரபேத:। அந்யேஷு ஹி ஸூத்ரேஷு க்வசித் க்வசித் பூர்வபக்ஷ ஸித்தாந்த ரசநா பங்கிபேதேऽபி பலதோ ந விவாத:। இவ்வசனங்களால் ஸ்ரீ ராமாநுஜமதத்தின் பெருமை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தவிர ஸகுணத்தில் ஈடுபடும் அத்வைதிகளெல்லோருமே ஸ்ரீ ராமாநுஜமதத்தை க்ரஹிக்கலாம் என்பதும் இவ் வசனங்களால் வ்யக்தம். ஸ்ரீ தேசிகன் ஸமகாலத்தினரான வித்யாரண்யரும், பிற்காலத்துப் பண்டிதச்ரேஷ்டரான ஸ்ரீ தீக்ஷிதரும், சததூஷணி முதலிய க்ரந்தங்களுக்குப் பதில் எழுதாமல் விட்டனர். ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் முதலில் விஷ்ணுபாரம்யத்தை அங்கீகரித்திருந்தார் என்பது குவலயாநந்தத்தில் முதல் ச்லோகத்தில் காணலாம். பிறகு விஜயநகரத்தார் அரசாக்ஷியில் கீழ்ராயவேலூரில் கவர்னர்போல் ஓர் அதிகாரத்தை வஹித்த சின்ன பொம்மனென்பவன் ஆச்ரயத்தைப் பெற்று தீக்ஷிதரவர்கள் அவன் கட்டளைக்கிணங்க சைவ நூல்களை எழுதலானாரென்பது சிவார்க்கமணி தீபிகையில் ஆரம்ப ச்லோகங்களால் அறியலாம். காலக்ரமத்தில் அவர் சைவராகவே மாறிவிட்டார். அவர் 'ஆநந்தலஹரீ' என்ற நூலில் 'நன்கு ஆராய்ந்தால் த்ரிமூர்த்திகளிலொருவரான விஷ்ணுவைக்காட்டிலும் த்ரிமூர்த்திகளிலொருவரான சிவனுக்குப் புராணங்களில் நிகர்ஷம் சொல்லப்படுவது உண்மையே. ஆனால் இந்த மூன்று மூர்த்திகளுக்கும் மேற்பட்ட மூர்த்தியான பரமசிவன் ஸர்வோத்க்ருஷ்டர் என்று சொல்லுகிறார்.

இதிலுள்ள தோஷம் ஸகலருமறியக் கூடியதே. இவர் சொல்லும் பரமசிவனும் த்ரிமூர்த்திகளிலொருவராகிய சிவனும் அபின்னமாயிருக்க ஒருவருக்கு ஏற்றமும் மற்றவருக்குத் தாழ்வும் சொல்லுவது சற்றும் பொருந்தாது. ஆகவே தேவதைகளில் ஏற்றத்தாழ்வை நிர்ணயிக்குமிடத்திலும் அவருக்கும் நமக்கும் வித்யாஸமே.

அத்வைத பண்டிதர்கள் மிக முக்கியமாகக் கருதும் ஸந்யாஸத்தை அவர் ஸ்வீகரிக்கவில்லை. அதற்கு மாறாக வாஜபேயாந்தமான கர்மாக்களையே முக்கியமாக நினைத்து அநுஷ்டித்து சரீரபாதம வரை கர்மடராகவே இருந்தார். தமது வம்சத்தினருக்கும் ஸந்யாஸம் வேண்டாமென விதித்தார் என்ற கர்ணபரம்பரை வதந்தியும் பொருந்துகிறது. இதற்கும் காரணம் ஸ்ரீ தேசிகன் ஸூக்திகளே. ஸ்ரீதேசிகன் சததூஷணியில் 64-வது வாதத்தில் பரமஹம்ஸர்களுக்கும் சிகா, யஜ்ஞோபவீததாரணமும், த்ரிதண்டமும் முக்கியமென நிரூபித்ததுடன் சிகா யஜ்ஞோபவீத வர்ஜநம் ஸர்வவிதத்திலும் தோஷாவஹமென காட்டியாயனச்ருதி, அதற்கு உபப்ரும்ஹணமான ஸ்ம்ருதிகள் ஆகிய அநந்யதா ஸித்தமான ப்ரமாணங்களைக் கொண்டு நிரூபித்துள்ளார். ப்ரம்ம ஸூத்ரம் 3-வது அத்யாயம் 4-வது பாதத்தில் ஸந்யாஸாச்ரமத்தைப்பற்றி ப்ரஸ்தாவம் வரும் ப்ரகரணத்தில் கல்பதருவில் 'பரமஹம்ஸருக்கு சிகா யஜ்ஞோபவீதம் கூடாதென்று விதிக்கும் ச்ருதி உங்கள் கண்களில் ஏன் விழவில்லை' என்று சொல்லி ஓர் ச்ருதியையும் உதாஹரித்துள்ளார். இந்த இடத்தில் பரிமளவ்யாக்யானத்தில் தீக்ஷிதரவர்கள் நிர்ணயம் சொல்லத் தயங்குகிறார். கல்பதருக்காரர் காட்டிய ச்ருதி கோதாவரீ தீரத்திலுள்ளது என்று சொல்லிவிட்டு பரஸ்பர விருத்தமான இருவித ச்ருதிகளில் எது ப்ரமாணம்? எது ப்ரமாணமல்ல? என்பதை நிர்ணயிக்காமல் மழுப்பி விட்டார். ஸ்ரீதேசிகன் காட்டிய ச்ருதி தமிழ்நாட்டில் ப்ரஸித்தமானது. (காஞ்சீபுரத்தில் அச்சிடப்பட்டுள்ளது.)

ஆகவே அதைத் தள்ள வழி இல்லை. கல்பதருக்காரர் காட்டிய ச்ருதி தமிழ் நாட்டில் ப்ரஸித்தமில்லாததோடு வேறெங்கும் ப்ரசாரத்திலிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே பரமஹம்ஸருடைய லக்ஷணங்களில் உறுதியில்லாததால் தீக்ஷிதரவர்கள் ஸந்யாஸம் ஸ்வீகரிக்கவில்லையென யூகிக்க முடிகின்றது.

ஸ்ரீ:

ஸ்ரீ தேசிகனும் பாதுகாஸஹஸ்ரமும்

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான நிகமாந்தமஹா
தேசிகனுடைய முக்யமான ஸ்தோத்ரங்களில்
பகவானுடைய தயையை வர்ணிக்கும் தயாச
தகமும் ஜீவராசிகளை ரக்ஷிக்கும் பெருமை
கொண்ட பாதுகா ஸஹஸ்ரமும் நம்போன்ற
வர்களால் வாசித்துப் பலனடையத் தக்கவை
களாகும். ஸ்ரீமான் வேங்கடநாதர் ஒரு அவ
தார புருஷனு இல்லையா? என்று ஸந்தேஹப்
படும் சில மானிடவர்க்கத்திற்கு அவராலியற்
றப்பட்ட பாதுகாஸஹஸ்ர ச்லோகங்களை கவ
னித்துப் படித்தால் அம்மஹானுடைய பெரு
மை விளங்கும். நம்மில் சிலர் ஸம்ஸ்க்ருதம்
வாசிக்கத்தெரியாமல் இருக்கிறார்கள். அவர்
களுக்கு ஒரு வேண்டுகோள். ஸ்ரீ பாதுகா
ஸஹஸ்ர க்ரந்தத்தை காலக்ஷேபம் செய்வதற்
காகவாது அவர்கள் ஸம்ஸ்க்ருதம் கற்றுக்
கொள்ளவேண்டும். அந்த க்ரந்தத்தின் அழ
கையும் அநுபவிக்க வேண்டும். இந்த க்ரந்த
மானது ஸ்ரீரங்கத்தில்—செழுமறையின் முத
லெழுத்துச்சேர்ந்த கோயிலில் மூன்று மணி
நேரத்திற்குள் ஸ்ரீ வேங்கடநாதமஹாகவியி
னுல் நூலில் முத்துக்கள் கோர்க்கப்பட்டது
போல் விவிதமான வ்ருத்தங்களில் செய்யப்
பட்டிருக்கிறது. இச்சிறுவ்யாஸத்தில் அந்த
க்ரந்தத்தினுடையயழகை விவரிக்க இயலாது.
நம் கவி சொல்வது போல் ஆகாசமெல்லாம்
பத்ரிகையாயும், ஸப்த ஸாகரமும் மஷியாயும்
ஆயிரந்திருமுகங்களையுடையமஹாவிஷ்ணுவே
சொல்லுகிறவராயுமிருந்தால் இப்பாதுகா
ஸஹஸ்ரத்தின் பெருமையை ஒருவாறு எழுத
லாம். என் சிறிய புத்திக்கெட்டினமட்டில்
கீழ் சில ச்லோகங்களின் கருத்துக்களை விளக்
குகிறேன்.

கவி முதலில் 'ஸ்ரீரங்கநாதனின் பாதுகாபக்
தர்கள் ஸ்ரீ ரங்கநாதனின் பாதுகைகளைத்தங்
கள் முடியில் வஹிப்பதனுலுலகங்களை ரக்ஷிக்
கத்தக்க வல்லமைபெற்று மேன்மைபொருந்தி
யிருக்கின்றனர்' என்று சொல்லிவிட்டு எவர்
உலகம் முழுவதிலும் ஸ்ரீ ராகவனுடையபாது
கையின் ப்ரபாவம் விளங்குவதற்கு முதலாக
இருந்தவரும், பக்தியுடையவர்களுக்கு முதல்
உதாஹரணமுமான ஸ்ரீபரதாழ்வானை வணங்
குகிறார். 'பரதாய பரம் நமோऽஸ்து தஸ்மை
ப்ரதமோதாஹரணாய பக்திபாஜாம் । யது
பஜ்ஞமசேஷத: ப்ருதிவ்யாம் ப்ரதிதோ ராகவ
பாதுகா ப்ரபாவ: ॥ வால்மீகி மஹாகவியினுல்
ஸ்ரீ ராமன் 14 வருஷங்கள் வனவாஸம் செய்
யும்போது ஸ்ரீ ராமனுல் சித்ரகூடத்தில் பரத
னுக்குக் கொடுக்கப்பட்ட பாதுகையை ஸ்ரீமத்
ராமாயணத்தில் வர்ணிக்கப்பட்டதை நம் நிக
மாந்தகவியும் அதை மனத்தில் வைத்து காளி
தாஸன் எப்படி மஹாபாரதத்தில் சாகுந்தல
உபாக்யானத்தைப்படித்துத் தன் புத்திக்கேற்
றவாறு மாற்றி 'அபிஜ்ஞாநசாகுந்தல' மென்ற
நாடகத்தை இயிற்றினுனே, அதேமாதிரியாக
சிற்சில விஷயங்களில் மாற்றியும் சிற்சில விஷ
யத்தில் ஸ்ரீமத்ராமாயணத்தில் உள்ளபடியும்
ச்லோகங்களை ரசனை பண்ணியிருக்கிறார்.
அந்த வால்மீகிமஹாமுனிவரையும் கீழ்க்கண்
டபடி வணங்குகிறார். 'திவ்யாஸ்தாநாத் த்வ
மிவ ஜகதீம் பாதுகே காஹமாநா பாதந்யா
ஸம் ப்ரதமமநகா பாரதீ யத்ர சக்ரே । யோக
க்ஷேமம் ஸகலஜகதாம் த்வய்யதீநம் ஸ ஜாநந்
வாசம் திவ்யாம் திசது வஸ¬தா ப்ரோத்ர
ஜந்மா முநிர்மே' ॥ ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்
தாலே வால்மீகியின் வாக்கில் ஸரஸ்வதிதேவி
ஸத்யலோகத்திலிருந்துவந்து தன் இடமாகக்
கொண்டாளோ அதுமாதிரி பாதுகையுமிக்ஷ்
வாகுமஹாராஜனின் ப்ரார்த்தனைக் கிணங்கி
ஸ்ரீரங்கநாதனேடுகூட ராமனுடன் வந்து
சேர்ந்தாள் என்று ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தில்
ப்ரஸித்தம். வால்மீகியாகிய ஆதிகவியினுல்
ஸ்ரீமத்ராமாயணத்தில் 'ஏதே ஹி ஸர்வலோ
கஸ்ய யோகக்ஷேமம் விதாஸ்யத:' என்று பர
தனிடம் ஸ்ரீராமபாதுகையைக் கொடுக்கும்
போது சொல்லப்பட்டது. அந்தப் பாதுகை
யின் மஹிமையை அறிந்த ஸ்ரீ வால்மீகிமுனி
தனக்கு திவ்யமான வாக்கைக் கொடுக்கவேணு
மென்று ப்ரார்த்திக்கிறார்.

பகவானுடைய திருமேனியை அலங்கரிக்
கும் ஆபரணங்களில், கிரீடம் தலையையும்
கௌஸ்துபம் என்ற ரத்நம் வக்ஷஸ்தலத்தை
யும், குண்டலம் காதுகளையும் அலங்கரிப்பது
போல் பகவானுடைய பாதத்தை ஏன் பாது
கைகள் அலங்கரிக்கின்றன என்பதற்கு கார
ணங்கள் அநேகம். அதில் எம்பெருமான்,
ஸ்ரீராமாவதாரத்தில் மிதிலைக்கெழுந்தருளும்

பொழுது வழியில் கல்லாய்க்கிடந்த அகலையைப் பெண்ணாக்கினதும், க்ருஷ்ணாவதாரத்தில் குழந்தையாய் இருக்கும்பொழுது தொட்டிலின் மேற்சகட்டிலாவேசித்திருந்த ஓர் அஸுரனை யுதைத்துத் தள்ளினதும், த்ரிவிக்ரமாவதாரத்தில் ஆகாசத்தையளந்த திருவடியில் ப்ரஹ்மா தீர்த்தஞ்சேர்க்கக் கங்கையையுண்டாக்கினதும், க்ருஷ்ணாவதாரத்திலேயே அச்வத்தாமா ப்ரயோகித்த அபாண்டவாஸ்த்ரத்தினால் உத்தரை வயிற்றினின்றும் கரிக்கட்டையாய் விழுந்ததைப் 'பரீக்ஷித்' என்ற ஓரரசன் ஆக்கினதும் இன்றும் அதே அவதாரத்திலும் இதர அவதாரங்களிலும் பலவித விசித்ர செய்கைகளைச் செய்ததும் இந்தத் திருவடிகளின் ப்ரபாவமன்றோ என்று நினைத்தவை போல் எப்பொழுதும் அதைவிட்டுப் பிரியாமல் அதனுடனே நேசித்திருக்கிற ஸ்ரீரங்கநாதமணிபாதுகைகளை கவி சரணமடைகிறார். இம்மாதிரி பாதுகாப்ரபாவத்தை வர்ணித்துவிட்டு பரதாழ்வானுக்கு பாதுகையை ஸமர்ப்பணம் பண்ணும் அழகை வர்ணிக்கிறார்.

இருபாதுகைகளும் ஸ்ரீராமபத்ரனின் சரணாரவிந்தத்தை ஆச்ரயித்த மாஹாத்ம்யத்தால் நவரத்நமயமான ராஜ்யபீடத்தில் அமர்ந்துகொண்டு செங்கோல் பிடித்துப் பூமண்டலத்தையே அரசாளும் பாக்யத்தை யடைந்தன. அதிலும் உயர்ந்த ஸ்தானமாகிய ரத்னபீடத்தில் ஏறுவதற்கு பாஞ்சஜன்ய அவதாரமான பரதாழ்வாருடைய சிரஸ்ஸை ஸோபாநமாகவும் அவலம்பித்துக் கொண்டது. இந்த பாக்யத்தை யாரால்தானடைய முடியும்? இவ்வளவுக்கும் ஸ்ரீராமபாத ஸமாச்ரயணமே மூல காரணமாகும். இவ்விதம் மஹிமையுள்ள பாதுகை அரசாளும்போது அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கு விதமான புருஷார்த்தங்களுள் ஒவ்வொன்றும் உருவமெடுத்துக்கொண்டு பாதுகையை தர்சனம் செய்த மனிதர்களைத் தனக்கு ஆச்ரயமாக அவலம்பித்தன. நான்கு விதமான புருஷார்த்தங்களும் நம்மிடத்தில் கைகூடி வந்ததற்கு ஸகல ஜனங்களும் நாம் என்ன தவம் செய்தோம் என்று ஆச்சரியமடைந்தார்கள். அக்காரணத்தால் ஸகல ஜனங்களும் ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்காமல் பாதுகை அரசாளும்போது ஸ்வயமாகவே ராஜகைங்கர்யத்தைச் செய்துவந்தார்கள். 'ஸூதா: பௌராணிகா: ப்ரோக்தா: மாகதா: வம்சசம்ஸகா: | வந்திகஸ் த்வமலப்ரஜ்ஞா: ப்ரஸ்தாவ ஸத்ருசோக்தய:' என்றபடி ஸூதர்கள், மாகதர்கள் வந்திகள், ராஜஸமூஹத்திலேயே இருந்துகொண்டு ராஜகைங்கர்யத்தைச் செய்துவரக் கூடியவர்கள். இந்த மூன்று விதமான கைங்கர்யங்களையும் இதுபோன்ற மற்ற கைங்கர்யங்களையும் ஸகல ஜனங்களும் ஸ்வயமாகவே செய்துவந்த காரணத்தால் இவர்களுக்கு ப்ரதிமாதம் வேதனம் கொடுக்கும் செலவுகூட இல்லாமல் போனதினால் பதினான்கு வருடங்களிலும் கஜானாக்கள் ஸம்ருத்தமாக இருந்து வந்தன. இவ்விதமான தாத்பர்யங்களுடன் ஸ்ரீ நிகமாந்ததேசிகன் ஸ்ரீராமபாதுகையை ஸ்துதிக்கிறார்.

மேலும் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனிடத்தில் பாதுகைகளுக்கு உள்ள ப்ரேமையை வெளியிடுகிறார். 'ஸத்யால்லோகாத் ஸகலமஹிதாத் ஸ்தாநதோ வா ரகூணாம் ஸங்கே மாதஸ் ஸமதிககுணம் ஸைகதம் ஸஹ்யஜாயா: | பூர்வம் பூர்வம் சிரபரிசிதம் பாதுகே யத் த்யஜந்த்யா நீதோ நாதஸ் ததிதமிதரம் நீயதே ந த்வயாऽஸௌ' || ஸர்வோத்தமமான ஸத்திய லோகமாகட்டும் திருவயோத்தியாகட்டும் இவைகளைப்பார்க்கிலும் இந்தத் திருவரங்கமே மிகவும் மேலானதென்று நினைக்கிறேன். ஏனென்றால் முன் ஒல்வொன்றாய் அனுபவித்துப் பார்த்து அவைகளை யெல்லாம் விட்டுவிட்டு இவ்விடம் வந்து சேர்ந்த நீ இதைவிட்டு வேறெங்கும் எம்பெருமானை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகவில்லையே.

கடைசியாக நிர்வேதப் பத்ததியில் கவி எம்பெருமானுக்கு கைங்சர்யம் செய்வதையே ப்ரார்த்திக்கிறார். 'அபி ஜந்மநி பாதுகே பரஸ்மிந் அநகை: கர்மபிரீத்ருசோ பவேயம் | ய இமேவிநயேநரங்கபர்த்து: ஸமயே த்வாம் பதயோ: ஸமர்ப்பயந்தி ||' ஓ பாதுகையே! அடியேன் இப்போது உன்னை ஆராதிக்கின்ற ஸத்கர்மங்களாலினி மோக்ஷஸாம்ராஜ்யம் பெற்றபோதும் அந்தந்த ஸமயங்களில் உன்னை எம்பெருமானுடைய திருவடிகளில் ஸமர்ப்பிக்கின்ற இந்த மஹாபுருஷர்கள் போலவே எம்பெருமானுக்குக் கைங்கர்யமே செய்துகொண்டிருக்கக் கடவேன்.

நம் அஹோபில ந்ருஸிம்ஹனும் திவ்ய பாதுகையுடன் ஸேவை ஸாதிப்பதை தேசிகன் பாதூஸஹஸ்ரச்லோகங்களின் பாவத்துடன் அனுபவித்து, கேட்டு எல்லோரும் பாதுகாபக்தர்களாகவேண்டுமென்பது என் ப்ரார்த்தனை.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

8-12-55 வியாழக்கிழமை சிறுதாமூரார் ரொம்பவும் ப்ரார்த்தித்ததன்பேரில் ஒலக்கூரிலிருந்து 4-மைலுள்ள அவ்வூர் எழுந்தருளியாயிற்று. வெள்ளிக்கிழமை அவ்வூரார் தசாவதார மண்டபத்தில் பெருமாளை ஆராதித்தார்கள். மழையினால் ஏற்பட்ட அஸௌகர்யத்தை முன்னிட்டு பழவேரி எழுந்தருளியாயிற்று. ஆனால் புறப்பட்ட காலம் ஸாயங்காலமாயிருந்தபடியால் குறுக்கு வழியில் போகும் போது இருட்டிவிட்டபடியால் வழியிலேயே அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு வழிவிபரம் ஸரியாகத் தெரியாதபடியால் கொஞ்சம் நாழிகை அங்கேயே தங்கும்படியாயிருந்தது. தற்செயலாக குடியானவனொருவன் அங்கெதிர்பட்டு தான் பழவேரிக்கு வழி காட்டுவதாகச் சொல்லி வழி காட்டவும் 10-மணி சுமாருக்கு பழவேரி எழுந்தருளியாயிற்று. அதுஸமயம் ஸ்ரீ பாஷ்யகாரர் மேல்நாட்டுக்கெழுந்தருளும்போது வழி திகைத்து பின் வேடர்களால் வழியறிந்து யாத்திரையைத் தொடர்ந்த வ்ருத்தாந்தத்தை நிதர்சனமாக ஸாதிக்கும்படியாயிருந்தது. பழவேரியார்கள் ஏகாதசியும், துவாதசியும் அங்கேயே எழுந்தருளியிருக்கவேணும் என்று ப்ரார்த்தித்தார்கள். தையார் வாஸிகளும் அங்கேயே எழுந்தருளவேணுமென்று முன்னமேயே ப்ரார்த்தித்திருந்தபடியாலும் ராத்திரி ரொம்பவும் நாழியாகிவிட்டபடியால் இங்கு தங்கியதாகவும் இவ்விடம் தங்கியதை தங்குமிடமாகவே வைத்துக்கொண்டு 2நாள் ஆராதிப்பதைச்சேர்த்து திங்கட்கிழமை ஆராதியுங்கள் என்று ஸாதித்துவிட்டு ஏகாதசி மத்யாஹ்நம் 3-மணிக்கு தையார் எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகள் பூர்ணகும்ப மரியாதையுடன் எதிர்கொண்டழைத்து மடத்தில் எழுந்தருளப்பண்ணினார்கள். ஸாயங்காலம் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியதைப் பற்றி ஊரிலுள்ள ஜனங்களெல்லோரும் ஆபாலகோபாலம் ஆநந்தபரிதரானார்கள். மறுநாள் ஸ்வாதித் திருமஞ்சனத்தையும் பின்மாலையே நடத்திவைத்து துவாதசி பாரணையும் நடத்தி வைத்து ஆராதித்தார்கள். பழவேரியார் அங்கு வந்து வெள்ளி மண்டப ஸம்பாவனையைப் பண்ணி திங்கட்கிழமை பழவேரி எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்ததற்கிணங்க அன்றிரவு அவ்வூர் எழுந்தருளியாயிற்று. திங்கட்கிழமையவ்வூரில் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்தையுத்தேசித்து வேதக்ரந்தபாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டது. தங்களூரில் தொடங்கியதைப்பற்றி அவ்வூரார் ரொம்பவும் ஸந்தோஷப்பட்டார்கள். அன்று ஊரார் பொதுவில் ஆராதித்தார்கள். வந்தவாசியார் ப்ரார்த்தனையின்பேரில் அன்றிரவு அவ்வூரெழுந்தருளியாயிற்று. அங்கு 13-12-55 ல் தூசி ரங்காச்சார் கீழ்ப்பாக்கம் க்ருஷ்ணமாச்சார் முதலிய ஊர் வாஸிகள் ச்ரத்தையுடன் ஆராதித்தார்கள். டோலையும் நடத்திவைத்தார்கள். சூர்யக்ரஹணத்தையுத்தேசித்து சோகத்தூரார் ப்ரார்த்தனையின்பேரில் அவ்வூரெழுந்தருளினார். புதன் கிழமை க்ரஹணத்தன்று அவ்வூரார் தசாவதாரமண்டபம் கட்டி ஆராதித்தார்கள். 14-12-55 அன்று சோகத்தூரார் யதாசக்தி ஆராதித்தார்ள். அன்று சூர்யக்ரஹணமானதினால் அவ்வூர் குளத்திற்கு எழுந்தருளி நீராட்டம் செய்தாயிற்று. க்ரஹணத்திற்கு அவ்வூரில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருப்பது தெரிந்து தையார், பழவேரி, வந்தவாசி, நாவல்பாக்கம் முதலியவிடங்களிலிருந்து ரொம்ப பேர்கள் வந்திருந்தார்கள். அவ்வூரிலும் பக்கத்து ஊர்களிலுமுள்ள க்ராமக்குடிகள் உள்பட ரொம்ப பேர்கள்வந்து க்ரஹணஸ்நாநம் செய்தார்கள். அன்று ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 15-12-55 ல் 12 மைல் தூரமுள்ள ஒசூர் எழுந்தருளியாயிற்று. வீதியில் வில்விவலம் அக்ரஹாரத்தில் தட்டு ஸமர்ப்பித்து ஹாரத்தி எடுத்தார்கள். ஒசூரில் பூர்ணமாக ஆராதித்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 13-மைல் தூரமுள்ள குவ்ளவேடு

கெழுந்தருளியாயிற்று. 16-12-55 அன்று அவ்விடத்தில் தநுர்மாத ஆராதனம் உபக்ரமிக்கப்பட்டது. அன்று ராத்திரி டோலோத்ஸவமும் செய்துவைத்தார்கள். மறுநாளும் அங்கேயே எழுந்தருளியிருக்கும்படி ப்ரார்த்தித்து ஆராதித்தார்கள். 17-12-55 அன்று ராத்திரி 6- மைல் தூரமுள்ள புரிசைக்கெழுந்தருளியாயிற்று. அன்று ஊரார் சேர்ந்து பூர்ணமாய் ஆராதித்தார்கள். புரிசை கிருஷ்ணமாச்சாரியார் (42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரம தௌஹித்ரன்) ஆத்தில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். மறுநாளும் அங்கேயே எழுந்தருளியிருக்க வேணுமென்று ரொம்பப் ப்ரார்த்தித்ததன்பேரில் திருவுள்ளம்பற்றி எழுந்தருளியிருந்தார். அன்றவர் ததீயாராதனை செய்து யதாசக்தி ஆராதித்தார் 19-12-55 அன்று ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள முக்கூருக்கெழுந்தருளினர். அன்று ஊரார்கள் பூர்ணமாய் ஆராதித்தார்கள். மறுநாள் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம். அன்று ஸ்ரீமான் ஸ்ரீ ரங்காராமாநுஜாச்சாரியர் அவர் தம்பி ஸ்ரீராமாச்சாரியார், ஸ்ரீவெங்கடவாதச்சாரியார், வித்வான் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் விசேஷமாய் ததீயாராதனை பண்ணி ஆராதித்தார்கள். அன்று காலை சாற்றுமுறை, ஸம்பாவனை, ஸ்ரீ பாததீர்த்தம் கோஷ்டிகள் நன்றாய் நடந்தது. பக்கத்து அக்ராஹாரங்களிலிருந்தும், பட்டணம் முதலிய வெளியூர்களிலிருந்தும் ரொம்ப பேர்கள் வந்திருந்தார்கள். அன்று டோலோத்ஸவமும் நடந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள இஞ்சிமேட்டுக்கெழுந்தருளியாயிற்று. அங்கிரண்டு தினங்கள் பூர்ணமாய் ஆராதித்தார்கள். இஞ்சிமேட்டில் 42- வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரால் (இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கரால்) புதிதாகக் கட்டப்பட்டு ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற ப்ரஹ்லாத வரதப் பெருமாளுக்கு 23-12-55 ல் வீதி உத்ஸவம் நடத்தும்படி நியமனமாகி அந்தப்படி நடந்தது. ஷெ கோயிலில் ஆழ்வார், ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகன், ஷஷ்டபராங்குசமஹாதேசிகன் 34- வது பட்டம் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் 42-வது பட்டம் இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கர், இந்த பிம்பங்கள் 42- வது பட்டம் இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கர் நாளிலேயே எழுந்தருளப்பண்ணப்பட்டு ப்ரதிஷ்டை மட்டில் ஆகாமலிருந்தது. விஜய ஹுல ப்ரதிஷ்டை நடந்தது. 6- வது பட்டம், 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்களை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கெழுந்தருளப்பண்ணி மங்களாசாஸனம் நடத்தி வைத்தாயிற்று. இரண்டு நாளும் அங்கேயே எழுந்தருளியிருந்தார்கள். உள்ளூர்பெருமாள் வீதி உத்ஸவத்தின்போது இரண்டு அழகியசிங்கர்களுக்கும் கூடவே புறப்பாடு பண்ணப்பட்டது. யானை குதிரை முதலிய பிருதுக்களுடனும், பாண்டு வாத்யம், மத்தாப்பு வாணவேடிக்கைகளுடனும் நடந்த வீதி உத்ஸவத்தை ஊரார் ஸேவித்து விட்டு பெருமாளைப் ப்ரதிஷ்டை செய்ததற்குமேல்பட இந்த உத்ஸவம் நடத்தி வைத்தது பற்றி ரொம்பவும் ஸந்தோஷமாயிருக்கிறது. எங்களுடைய பாக்யமே பாக்யம் என்று ஸ்ரீ ஸந்நிதியில் விஜ்ஞாபித்தார்கள். அன்று ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள சோழவரம் எழுந்தருளினர். ஊரார் யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று மத்யாஹ்னம் ஆவணியாபுரம் மலைமேலுள்ள நரஸிம்ஹன் ஸந்நிதிக்கெழுந்தருளி உடனே திரும்பி எழுந்தருளியாயிற்று. அந்த மலையின் மேலே ரங்கநாதன், நரஸிம்ஹன், வரதன். எழுந்தருளியிருக்கிறார்கள். நடுபாகத்தில் யோகந்ருஸிம்ஹனும் உத்ஸவர் நின்ற திருக்கோலத்தில் ந்ருஸிம்ஹனும் எழுந்தருளியிருக்கிறார்கள். கீழே 8 ந்ருஸிம்ஹ மூர்த்தியும் மேலே 1 ந்ருஸிம்ஹ மூர்த்தியும் ஆக 9 ந்ருஸிம்ஹ மூர்த்திகள் அந்த கோவிலிலேயே எழுந்தருளியிருக்கிறார்கள். அன்று காலை பகல் பத்து சாற்றுமுறை திருமொழித் திருநாள் சாற்றுமுறை நடந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள ஆரணிக்கு எழுந்தருளினர். 25-12-55 அன்று அவ்வூரில் முக்கூர் ஸ்ரீராமாச்சாரியார் முத

லிய வக்கீல்கள் ஆராதித்தார்கள். அன்று வைகுண்ட ஏகாதசி. திருவாய்மொழித் திருநாள் துடக்கமாயிற்று. கோஷ்டி சாற்றுமுறை நன்றாய் நடந்தது. பிறகு அங்கு வந்தவர்களுடைய மனதைக் கவரும்படி சிசையினுவச்ய கதையைப்பற்றி அவர்களுக்கு நன்றாய் நிரூபணம் பண்ணி உபந்யஸித்தாயிற்று. 25-12-55 ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள தண்டரைக்கு எழுந்தருளினார். துவாதசி அன்றும் மறுநாளும் அவ்வூரார்கள் நன்றாய் ஆராதித்தார்கள். துவாதசி அன்று டோலோத்ஸவம் வீதியிலுள்ள பந்தலில் எலக்ட்ரிக் விளக்குகள் போட்டு நடத்தினார்கள். 27-12-55 அங்கிருந்து புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள கொடநகருக்கெழுந்தருளினார். அன்று ஊர்வாசிகள் யதாசக்தி ஆராதித்தார்கள். கொடநகரில்தான் பெரியயானை பெருமாள் கைங்கர்யத்துக்கு வந்தது. உத்தானத்துக்கு முன்னமேயே அதற்கு மதம் ஆரம்பித்து விட்டபடியால் நரஸிம்ம புரத்திலேயே கட்டப்பட்டிருந்தது. இப்பொழுதுதான் மதம் தெளிந்து கைங்கர்யத்துக்கு வந்தது. அங்கிருந்து மணப்பாக்கம் எழுந்தருளும்போது எல்லோருடைய ஸௌகர்யத்தையும் உத்தேசித்துச் செய்யாரில் 1 நாள் தங்கிவிட்டு எழுந்தருளும்படி முக்கூர் ஸ்ரீ ரங்கராமாநுஜாச்சாரியார் ப்ரார்த்தனையின்பேரில் 29-12-55 அன்று செய்யாரில் ஸ்ரீரங்கராமாநுஜாச்சாரியார் க்ருஹத்தில் எழுந்தருளியிருந்தார். அன்றவர் யதாசக்தி ஆராதித்தார். அன்று ராத்திரி புரிசை ஸ்ரீ ராமாநுஜாச்சாரியார் டோலோத்ஸவம் நடத்தி வைத்தார். அங்கிருந்து புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள மணப்பாக்கம் எழுந்தருளினார் 30-12-55 அன்று மணப்பாக்கத்தில் அவ்வூரார்கள் பூர்ணமாயாராதித்தார்கள். அன்று காலை பெரிய திருமஞ்சனமும் நடந்தது. அன்று ராத்திரி புறட்ட்டு 13 மைல் தூரமுள்ள எசையனூருக்கு எழுந்தருளினார். எசையனூரில் இரண்டு தினங்களாராதித்தார்கள். 31-12-55 ஸாயங்காலம் புறப்பட்டு திருப்பாற்கடலுக்கு எழுந்தருளி 29-வது பட்டம் லாலாபேட்டை ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ருந்தாவனத்தை ஸேவித்துக்கொண்டு அதில் செய்யவேண்டிய ஜீர்ணோத்தாரணத்தையும் கடாக்ஷித்துத் திரும்பி எசையனூருக்கெழுந்தருளினார். 1-1-56 ராத்திரி புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள நாட்டேரிக்கெழுந்தருளினார். 2-1-56 ல் அவர்கள் பூர்ணமாய் ஆராதித்தார்கள். மறுநாளும் ஸ்ரீ அழகியசிங்கர் இங்கேயே எழுந்தருளியிருக்கவேணுமென்று ப்ரார்த்தித்ததன்பேரில் 3-1-56 தேதியும் நட்டேரியில் எழுந்தருளியிருந்தார். அன்று திருவாய்மொழித் திருநாள் சாற்றுமுறை நன்றாய் நடந்தது. நாட்டேரிக்கு சிறுநாவல்பட்டார்கள் வந்து தங்களூருக்கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்ததன் பேரில் 3-1-56 ராத்திரி புறப்பட்டு 4 மைல் தூரமுள்ள சிறுநாவல்பட்டுக்கு எழுந்தருளினார். 4-1-56 அன்று அவ்வூரார்கள் யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று பாலாருக்கு எழுந்தருளி மாத்யாஹ்நிக ஸ்நாநம் நடந்தது. அன்று 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரத்தை உத்தேசித்து ஸேவை பாராயணம் உபக்ரமிக்கப்பட்டது. அன்று இயற்பா சாற்றுமுறையும் நடந்தது. அன்று ராத்திரி பிரம்மதேசம் எழுந்தருளினார். வாத்யம் வாணவேடிக்கைகளுடன் எதிர்கொண்டழைத்தாராதித்தார்கள். 5-1-56 ராத்திரி புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள மோரணம் எழுந்தருளினார். 6-1-56 ராத்திரி புறப்பட்டு 2 மைல் தூரமுள்ள பூதேரிக்கு எழுந்தருளினார். மார்கழி மீ 23 உ 7-1-56 ராத்திரி பூதேரியிலிருந்து புறப்பட்டு முள்வாடி 8 மைல் எழுந்தருளியாயிற்று. முள்வாடியில் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் நடந்தது. அன்று பெரிய திருமஞ்சனம் (மண்டபத்திலுள்ள எல்லா பெருமாளுக்கும் திருமஞ்சனம்) பண்ணி வைத்தார்கள். ராத்திரி கண்ணன் டோலோத்ஸவம் நடந்தது. மறுநாள் துவாதசியன்று திருநக்ஷத்திரத் ததீயாராதனமும் விசேஷமாகப் பண்ணி ஆராதித்தார்கள். 9-1-56 ராத்திரி புறப்பட்டு 10 மைலிலுள்ள பூண்டிக்கு எழுந்தருளினார். முள்வாடியிலேயே பூண்டி ஸ்ரீ வாஸுதேவாசாரியார் தநுர் மீ முடிய தன்

க்ருஹத்தில் எழுந்தருளியிருக்க வேண்டுமென்றும் 5 நாளும் தன்னுடைய ஆராதனமாக நடக்கவேண்டுமென்றும் கொஞ்சம் முன் பின் இருந்தாலும் அவச்யம் திருவுள்ளம் பற்றவேணும் என்றும் ப்ரார்த்தித்தபடியால் அவருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அவர் அன்று 10-1-56 ல் பெரிய திருமஞ்சனம் (பெரிய திருமஞ்சனமென்றால் மண்டபத்திலுள்ள எல்லாப்பெருமாளுக்குமென்றர்த்தம். பெரிய பெருமாள் என்றால் கண்ணன், பெருமாள் மட்டும் என்று ஸங்கேதம்) பண்ணி வைத்தார். பெரிய பெருமாளுக்கு தான் முன்னதாகவே சந்தனத்தில் அளவு எடுத்துக் கொண்ட அபயஹஸ்தத்தை அளவாக வைத்துக்கொண்டு கமலத்தில் ஒரு அபயஹஸ்தம் சுமார் 2000– (இரண்டாயிரம்) ரூபாயில் கட்டி வைத்திருந்ததையும் சுமார் 2500- ல் அட்டிகையும் கமலத்தில் (நெக்லெஸ்) ஸமர்ப்பித்தார். ஆனால் அந்த அபயஹஸ்தம் பெரிய பெருமாளுடைய திருக்கையில் ஸமர்ப்பிக்க பெரியதாக் இல்லாததால் ரஜதத்தில் எழுந்தருளியிருக்கும் மங்களகிரி ந்ருஸிம்ஹனுக்கு சரியாக இருந்தபடியால் அவர் ஸமர்ப்பித்துக் கொண்டார். அவரும் யதுகிரி அம்மாளும் வந்து பெருமாளுக்கு ஸமர்ப்பித்து ஸேவித்துவிட்டு பெருமாள் திருவுள்ளம் என்று ரொம்பவும் ஸந்தோஷப்பட்டார்கள். ஸ்வர்ண அழகியசிங்கருக்கு தங்கமண்டபம், தங்கடோலேயும் ஏற்பட்ட பிறகு ஏற்கனவேயுள்ள தங்கடோலேயில் மங்களகிரி ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருப்பதும், இப்பொழுது கமல அபயஹஸ்தம் அந்த பெருமாளுக்கு ஏற்பட்டதும், நெடுந்தெருவில் ஸாளிக்ராமமாலே ஸமர்ப்பித்துக் கொண்டதையும், ஸேவித்தவர்கள் உத்தரோத்தரம் மஹிமை அதிகப்படுவது ரொம்பவும் போற்றினர்கள். * ஸ்ரீவாஸுதேவாசார்யர் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்.

(தொடரும்)

* ஸ்ரீ வாஸுதேவாசாரியர் பத்நி, ஸ்ரீமதி, யதுகிரி யம்மாள் டோலோத்ஸவத்தின் போது இந்தப் பாட்டைப் பாடினள்.

அபயஹஸ்தம் ப்ரணவ ஆரம் சாற்றின பண்ணிசை. நாத நாமக்ரியா ராகம்

அன்று அவுணனுடல் கீண்ட செங்கையனுக்கு
இன்று வயிர அஸ்தம் சாற்றி பணிவோமடி

மாலோலன் வைபவமடி மார்கழி நன்னளடி
ஆடையொளித்த கையன் ஆடையளித்த கையன்
ஆச்சியர் பால் வெண்ணெய் திருடியுண்ட கையன் (அன்)

பாலன் ப்ரஹ்லாதனை பாலித்த அபயக்தன்
மாலாம் ப்ரணவ கமலமாலே தரித்த மார்பன்
மாலோலன் வைபவமடி மார்கழி நன்னளடி

பூவாம் யதுகிரி வாழ்நாத நாமக்ரியா
பொற்கரக்கிளியுடன் அற்புத ஸேவை தந்த (அன்)

திருத்தம்

சென்ற ஸஞ்சிகையில் ஸஞ்சாரக்ரமத்தில் பக்கம் 350 ல் 1 வரியில் திருத்தி வாசிக்கவும்: செங்குரிச்சியில் 24-11-55 ல் மணியம், ஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீ வெங்கடாசாரியர் முதலான அக்ரஹாரவாஸிகளும், நத்தமன்னர்ஜாதி சிஷ்யர்களும் ஆராதித்தனர். ராத்திரி ஸ்ரீ கோவிந்தராஜ அய்யங்கார் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்.

ஸ்ரீ:

புத்தக விமர்சம்

ஹம்ஸஸந்தேசம் (ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனருளிச்செய்தது)

தமிழ் மொழிபெயர்ப்பும் – உரையும்

இயற்றியவர்:— ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய, வைத்திய ரத்னம், தேசிகதர்சநதுரந்தர, பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை 10.

கிடைக்குமிடம்:— ஆசிரியர், "வைத்தியகலாநிதி ஆபீஸ்" ஆர்ம்ஸ்ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை 10

விலை ரூபாய் 1-0-0

உலகில் பேரின்பமல்லாததை இன்பமாகக்கருதி வாழ்பவர்களே அதிகம். பல வகைத்துன்பங்களுக்கிடையில் இவர்கள் ஒருவாறு உயிர்வாழ்கிறார்கள். துன்பங்கள் உடலைப் பற்றியும் உள்ளத்தைப்பற்றியுமிருக்கும். இம்மாதிரியான துன்பங்களை வாய்விட்டுக் கூறுவதினால் மனதுக்கு ஓரமைதி ஏற்படுகிறதென்பது மனோதத்வநிபுணர்களின் கொள்கை.

பகவானுடைய விபவாவதாரங்களில் ராமாவதாரகாலத்தில், ராமன் மானிட உருவுடனும் அதற்குகந்த செய்கைகளுடனும் வாழ்ந்து உத்தமபுருஷலக்ஷணத்தை நிலைநிறுத்தியவர். ஸீதையின் பிரிவாலேற்பட்ட துக்கத்தை வெளிப்படையாக பல விடங்களில் ராமன் காட்டியுள்ளார். பிறகு ஸீதையைத் தேடவும், கண்டுபிடித்தவுடன் சொல்லவேண்டிய செய்தியுடனும் ஹநுமானை அனுப்பினார். பிற்காலத்தில் கவி காளிதாஸன் ஹநுமான் ஸ்தானத்தில் மேகத்தை வைத்து மேகஸந்தேசமென்ற காவ்யத்தை எழுதினானென்று சொல்லும்படியான நிலையில் அதின் முதல்ச்லோகமமைந்திருக்கிறது. இதன் கதைப்பொருள் ஓர் யக்ஷனை முக்யமாகக்கொண்டது. ஆனால் ஸ்வாமி தேசிகனோவென்றால் ஸ்ரீராமபிரானையும் ஜானகி தேவியையும் விஷயமாகக்கொண்டு வேதாந்த நுட்பங்களையும் வ்யங்க்யார்த்தமாக வைத்து இந்த ஹம்ஸஸந்தேசத்தைச் செய்தருளினார்.

ஸ்ரீதேசிகன் செய்தருளிய இக்க்ரந்தம் ஸம்ஸ்க்ருதத்திலுள்ளது. இது ஸம்ஸ்க்ருதம் படித்தவர்களுக்கே பயன்படும். எல்லோருக்கும் புலப்படும்படி இந்த காவ்யத்தை தமிழில் எளியநடையில் ஸ்ரீ. உப. பண்டிட் துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி மொழிபெயர்த்து ஓர் அரிய கைங்கர்யம் செய்திருக்கிறார். ஆழ்ந்த வேதாந்த கருத்துக்களை ஸுலபமாக எல்லோருக்கும் புலனாகும்படி தமிழிலழகாக எழுதியுள்ளார். தமிழ் மொழிபெயர்ப்பு மிகவும் ஸுலபமான முறையில் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பாகத்தில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. வால்மீகிராமாயணத்தில் காணப்படும் மூலச்லோகங்களும் அவைகளுக்கும் இக்காவ்யத்திலுள்ள ச்லோகங்களுக்குமுள்ள தொடர்பும் விளக்கப்பட்டிருக்கின்றன. குறிப்புக்கள் மிகவுமுபகாரமுள்ளவைகளாக இருக்கின்றன. ஸம்ஸ்க்ருத பாஷாஜ்ஞாநம் மிதமாக உள்ளவர்கள்கூட இந்த மொழிபெயர்ப்பைப்படித்தும், அத்துடன் சேர்த்து மூல ச்லோகங்களைப்படித்தும் பாஷாஜ்ஞாநமும் ஸம்பாதித்துக்கொள்ளமுடியும் எனவும் தோன்றுகிறது. சுருக்கிச்சொன்னால் இந்த ஸ்வாமி இந்த காவ்யத்தைப் படிக்க விரும்புகிறவர்களுக்கும் பொதுவாக ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயத்துக்கும் ஓர் உயர்ந்த கைங்கர்யத்தைச் செய்திருக்கிறார் என்றே கூறமுடியும்.

[ஸம்பாதகர்]

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்

ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதிபிருதாலங்க்ருத ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனுல் ஆரம்பிக்கப்பட்ட **ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ்ஸின் 15-**வது வார்ஷிக ஸதஸ் மதுராந்தகத்தில் தைமீ 19௳ (1-2-56) புதன்கிழமை உபக்ரமித்து தைமீ 28௳ (10-2-56) திருநக்ஷத்ரத்தன்று பூர்த்தியடைவதால் ஷ ஸதஸ்ஸிற்கு விசிஷ்டாத்வைதவேதாந்தத்தில் வாக்யார்த்தம் சொல்லக்கூடிய வித்வான்களும், ஆஸ்திகர்களும் எழுந்தருளி வாக்யார்த்தங்களைச் சொல்லியும், சொல்வதைக் கேட்டு ஆனந்தித்தும் ஸ்ரீஅழகியசிங்கரின் அநுக்ரஹத்தையும், பலமந்த்ராக்ஷதையையும் பெற்றுக்கொள்ளும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீகார்யம்

குறிப்பு:— ஸதஸ்ஸில் ஸ்ரீபாஷ்யத்தில் அந்வயிக்கும் ஸ்வாமிகள் அவச்யம் தங்கள் தங்கள் ஸ்ரீகோசங்களுடன் (ஸ்ரீபாஷ்யகோசத்துடன்) பாராயணகைங்கர்யத்திலேயும் அவச்யம் 10 நாளைக்கும் அந்வயிக்கவேணும். ஸல்க்ஷணகனபாடிகளும் அவச்யம் 10 நாளிருந்து கைங்கர்யம் பண்ணவேண்டும்.

அடுத்த வருஷம் முதல் இந்த ஸதஸ் சில நிமித்தங்களைக்கொண்டு ஆடி மீ உத்திரா[illegible]கிலிருந்து (ஆளவந்தார் திருநக்ஷத்ரமாயிருப்பதால்) 10 தினங்கள் நடத்துவதாகத் [illegible]றியாகியிருக்கிறது.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.